பொன்விழா ஆண்டு காணும்

பாரதி கலை மன்றம், ஹூஸ்டன், டெக்சாஸ்

Bharathi Kalai Manram, Houston,Texas

# தமிழ்ச்சாரல்

## பொன்மலர்



சித்திரைச் சிறப்பிதழ்

April - 2024

# BKM Board members

President



Dr.Viji Ramachandran

Secretary



Mrs. Usha Vasu

Treasurer



Mrs. Devi Prabhaharan

Communication Director



Mr. Thangaraj Petchiappan

Literary Director



Mrs. Raji Vanchi

Vice-President



Mrs. Anitha Kumaran

Joint Secretary



Mrs. Kausalyadevi Nambi

Joint Treasurer



Mr. Raja Anandharaman

Joint Communications Director



Mrs. Savitha Vidyaprakash

Joint Literary Director



Mrs.Swarnalatha Magesh

Executive Director 1



Mrs. Suba Kannan

Executive Director 2



Mr. Ganesh Raghu

Past President



Mrs. Gangamalar Sivaprakash

Tamil School Director



Mr. Vidyaprakash Ramaswamy

## CLUB COORDINATORS

Club coordinators – Youth Club & golden group club coordinators



Mr.Ravisankar Periasamy



Mrs. Sowmya Ganeshram

Tamil Sabai coordinators



Mrs. Raji Vanchi



Mrs.Swarnalatha Magesh

# தலைவர் உரை

**திக்கெட்டும் பரவிய**
**தக்கதோர் தாய்மொழியால்**
**சங்கே முழங்கென ஓங்கியொலித்து**
**சங்கம் வைத்து சகோதரம் வளர்த்து**
**வங்கமேறி வந்த வாழ் குடிகள் நாம்.**




கலையோடு மொழி சார்ந்த பல வகை பண்பாட்டு நிகழ்வுகள் பொன்விழா காண வழி வகுக்கும் மேடையாக ஐம்பது ஆண்டுகளாகத் திகழ்கிறது ஹூஸ்டன் பாரதி கலை மன்றம். ஆம்! நமது பாரதி கலை மன்றம் 2024ஆம் ஆண்டை பொன்விழாக் கொண்டாட்ட ஆண்டாகப் பெற்று பீடு நடை போடுகிறது.

ஜனவரி 20,2024ஆம் நாளன்று, ஹூஸ்டன் பாரதி கலை மன்றம் பொன்விழா ஆண்டின் தொடக்க விழா, பொங்கல் திருவிழாவோடு இணைந்து இரு விழாவாய் பெரு விழாவாய் மீனாட்சித் திருக்கோயில் திருமண மண்டபத்தில் மலர்ந்தது. பொன்விழா ஆண்டின் கோலாகலத் திருவிழாவை, BKM ன் முன்னாள் தலைவர்கள் குழு (BKM Presidents Club) முழு பக்கபலமாகத் துணை நின்று, பொன்விழா ஆண்டிற்கான பதாகையையும் (BKM 50 plaque), இலச்சினை முத்திரையையும் (BKM 50 logo) சிறப்பு விருந்தினரான இந்தியத் தூதரகத் தலைவர் திரு.டி.சி மஞ்சுநாத்திடம் கையளிக்க, அவர் அதை சீரிய முறையில் செயல்படுத்தும் பொறுப்பை, BKM பொன்விழா ஆண்டின் தலைவர் என்ற முறையில் என்னிடமும் மற்றும் இவ்வாண்டின் செயற்குழுவின் கைகளிலும் ஒப்படைத்த நொடி மறக்க முடியாத தருணம் என்றே கூற வேண்டும். அனைவரும் நெடும்பயணத்திற்கான ஒளிப்பந்தத்தை ஏந்திய உணர்வை அடைந்தோம் என்றால் மிகையில்லை.

மேலும், பொன்விழா ஆண்டின் சிறப்பு அம்சமாக ‘கோல்டன் குரூப் கிளப்’ (BKM Golden Group) எனப்படும் மூத்தக்குடிமக்களுக்கான குழு; யூத் கிளப் (BKM Youth Club) என்னும் இளையர் அமைப்பு; ‘தமிழ்ச்சபை’ (BKM Tamil Sabai) என்னும் இலக்கிய குழு தொடங்கப்பட்டு அதற்கான ஒருங்கிணைப்பாளர்களிடம் வழங்கப்பட்டது.

கலை பண்பாட்டு நிகழ்வுகளோடு மொழிவளம் பேண பாரதி கலை மன்றம் ஐந்து வெவ்வேறு இடங்களில் தமிழ்ப்பள்ளிகளை நடத்தி வருகிறது. இந்த பொன்விழா ஆண்டில் தமிழ்ப்பள்ளிகளுக்கான சிறப்புப் பதாகை (banner), தமிழ்ப்பள்ளி இயக்குனர், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து மேடையில் வெளியிடப்பட்டது.

முப்பத்து ஐந்திற்கும் மேற்பட்ட குழுவினர் கலை நிகழ்ச்சிகளில் மாமதுரை மெச்சும் அன்னக்கொடிகளாகவும், உள்ளங்கவர் ஒட்டுமீசை கறுப்புக் கண்ணாடி கதாநாயகர்களாகவும் வந்து நம் மனம் கவர்ந்தனர்.

வரவேற்பு நடனமாக திருமதி.வித்யா மதுபாலாவின் சடாஷ்ரமம் பரதநாட்டியமும், சங்கே முழங்கு என சபையோரை கட்டி வைத்த நடனமும் அவையோரின் கரவொலிகளால் பாராட்டுக்களை குவித்தன. முத்தாய்ப்பாக வந்த சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்தினர் முப்பதுக்கும் மேற்பட்டோர் வழங்கிய பாரம்பரிய நடனங்களான கூத்துக்கலையும், பொய்க்கால் குதிரையும், கரகமும், மயிலாட்டமும், ஒயிலாட்டமும், சிலம்பமும் சில நிமிடங்கள் காண்பவரை மெய் மறக்கச் செய்து சிலையாக்கி விட்டது.

பெருநகர ஹூஸ்டனின் பெருமிதமாய் பாரதி கலை மன்றத்தின் பொன்விழாத் துவக்கம் இனிதாய் தொடங்கியது!

ஜனவரி முதல் மார்ச் வரை பல்வேறு வகையான நிகழ்வுகளை நாம் மிகச் சிறப்பாக நடத்தியுள்ளோம். ஒவ்வொரு மாதமும் ஓரிரு பெருநிகழ்வுகளும், ஏனைய சிறு நிகழ்வுகளும், மூன்று கிளப்புகளின் இணையவழி நிகழ்வுகளுமாக முதல் காலாண்டை கண்ணிமைக்கும் நேரத்தில் சுவாரசியமாக கடந்து விட்டோம். குறிப்பாக, பிப்ரவரி மாதம் நடைபெற்ற பட்டிமன்றம், பாடகர் ஹரீஷ் ராகவேந்திராவின் இன்னிசை காதலர் தின நிகழ்வு, யூத் கிளப்பின் செடி வளர்க்கும் திட்டம், SAC வசந்தின் மாஜிக் ஷோ, மார்ச் மாதத்தின் தமிழ்ப்பள்ளி போட்டிகள், கோல்டன் குரூப் கிளப்பின் நேரடி சந்திப்பு, மகளிர் தின கொண்டாட்டமான, 'சக்தி' நிகழ்ச்சி, BKM பிக்னிக் என வர்ணஜாலமாக நிகழ்வுகள் சிறப்பாக நடந்தேறின. அனைத்து நிகழ்வுகளின் வண்ணப் புகைப்படங்களின் அணிவகுப்பையும், சுவையான தகவல்களையும் நம் மாதாந்திர செய்திமடல் வழியாக உங்கள் மின்னஞ்சல் பெட்டிக்கும் அனுப்பி வருகிறோம்.

வாரந்தோறும் தமிழ்ப்பள்ளிகள் மிக சிறப்பாகச் செயலாற்ற ஓயாது உழைக்கும் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் சீரிய செயல் முறையையும், அவர்கள் அனைவரின் அளப்பரிய சேவையையும் மனதார பாராட்டி நன்றி கூறி வணங்குகிறேன். ஆசிரியர் பணி மென்மேலும் மிக சிறப்பாக நடக்க என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வருடம் தவறாது பாரதி கலை மன்ற நிகழ்வுகளை ஆதரித்து அவை சிறப்பாக நடைபெற விளம்பரங்கள் வழியாக நிதியுதவி அளித்து வரும் பல சிறு வணிகங்கள் பெரும் நமது பக்கபலமாகும். தொடர்ந்து இவ்வாண்டும் இந்நிறுவனங்கள் அளித்த ஆதரவிற்கும் உளம் மகிழ்ந்த நன்றி பல. எதிர்வரும் நிகழ்வுகளுக்கும் அவைகளின் ஆதரவை எதிர்நோக்கி உள்ளோம்.

அனைத்து நிகழ்விற்கும் மேலான ஆதரவை நல்கி வரும் BKM உறுப்பினர்களுக்கும் அதனை மிக சிறப்பாக உறுப்பினர்களுக்கு வழங்கிய செயற்குழுவினர்க்கும், கிளப் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தன்னார்வலர்களின் ஆதரவு மிகவும் போற்றத்தக்கது, அவர்கள் அனைவருக்கும் எனது ஆத்மார்தமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த பொன் விழா ஆண்டின் மிக ஆவலான தருணமான பொன் விழா கொண்டாட்டம் (Golden Jubilee Celebration), தொழிலாளர் தின நீள் விடுமுறையின் போது (Labor day weekend) ஆகஸ்ட் 30, ஆகஸ்ட் 31, செப்டம்பர் 1 ஆகிய மூன்று தினங்களில் மற்றுமொரு பெருவிழாவாக கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது! அனைவரும் ஒன்று கூடி மகிழும் வண்ணம் அவ்விழாவினை சிறப்பாக கொண்டாட அனைவரையும் வருக வருக என்று வரவேற்கிறோம்!

அன்பான உறுப்பினர்களின் பேராதரவால் அருகு போல் வேரோடி ஐம்பது ஆண்டுகளைக் கடந்து பொன்விழா ஆண்டில் அடியெடுத்து வைத்து அணிநடை போடும் பாரதி கலை மன்றம், மூங்கில் போல் சூழ்ந்த சுற்றத்துடன் ஆண்டுகள் நூறினையும் தாண்டி மேன்மேலும் செழிக்க வேண்டுமென வாழ்த்தி உங்களில் ஒருவராக என்றும் பயணிக்கும் ஆவலுடன் உள்ளேன். அனைவரையும் நன்றி மிக கூறி மகிழ்கிறேன்.

**– விஜயா இராமச்சந்திரன் (விஜி திரு)**

**தலைவர், பொன்விழா ஆண்டு 2024**
**பாரதி கலை மன்றம், ஹூஸ்டன்.**

# ஆசிரியர் பக்கம்



ராஜி வாஞ்சி



சுவர்ணலதா மகேஷ்

பைந்தமிழ் தேர்ப்பாகன் பாரதியின் பெயர் தாங்கி கலை கல்வி கலாச்சாரம் மொழி எனப் பன்முகமாய் பரந்து விரிந்து வரும் ஹூஸ்டன் பாரதி கலை மன்றம், இன்று ஐம்பது ஆண்டுகளை அடைந்து பொன்விழா கொண்டாடும் உன்னத நேரமாகும்.

புலம் பெயர்ந்து வந்து அயல் மண்ணில் வலம் வரும் நாமும், நம் வருங்கால தலைமுறையும் தமிழோடு தொடர்ந்து இயங்க, நம் தாய்மொழி வழி படைப்பாற்றலை வெளிப்படுத்த தமிழ்ச்சாரல் இதழ் அழகியதோர் சாளரமாக உள்ளது.

தமிழ்ச்சாரல் சித்திரைதோறும் சித்தகத்திப் பூவாய் மலர்கிறது. தீபாவளித் திருநாள் சமயத்தில் தீபச்சுடராய் திகழ்ந்து வெளியாகிறது. உங்கள் கற்பனை வளத்திற்கோர் வண்டல் மண்ணாய், தமிழ்ச்சாரல் செழிப்புடன் காத்திருக்கிறது.

கவிதை, கதை, கட்டுரைகள்,நூல் அறிமுகம், வாசிப்பு பகிர்வு,நேர்காணல்கள், உள்ளூர் சாதனையாளர்களை அடையாளம் கண்டு பெருமைப்படுத்துதல், தமிழ்ப்பள்ளி குழந்தைகளின் எழுதும் மற்றும் வரையும் திறன், சமையல் குறிப்பு, தமிழ்ப் புதிர்கள் எனப் பல்சுவையோடு மலர்கிறது.

தமிழ்ச்சாரல் இதழுக்குப் படைப்புகளை அனுப்பிய அனைவருக்கும் எங்கள் உளம் நிறை நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த இதழ் சிறப்பாக வெளியிட உதவி நல்கிய விளம்பரதாரர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து ஆதரவு அளிக்க அன்போடு விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்ச்சாரலை மேன்மேலும் வளப்படுத்த தங்களது மேலான கருத்துக்களையும், ஆக்கப்பூர்வமான விமர்சனங்களையும் எப்போதும் வரவேற்கிறோம். தங்களது கருத்துக்களை literarydirector@bkmhouston.org மற்றும் jointliterarydirector@bkmhouston.org என்ற எங்களது மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

நன்றி,

என்றும் அன்புடன்,

**ராஜி வாஞ்சி ( BKM இலக்கிய இயக்குனர் )**

**சுவர்ணலதா மகேஷ் (BKM இணை இலக்கிய இயக்குனர்)**

ஆசிரியர் குழு, தமிழ்ச்சாரல் - 2024.

நற்றமிழுக்கு நன்றி

பொறுப்புத் துறப்பு : வாசகர்களின் வசதிக்காக சில இடங்களில் ஆங்கிலச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

# பொருளடக்கம்


| | |
|---|---|
| நான் ஆட்சி செய்து வரும் ஹூஸ்டன் மாநகரிலே | 07 |
| பி.கே.எம் பொன் விழா ஆண்டு தொடக்க விழா மற்றும் கோலாகலப் பொங்கல் விழா கொண்டாட்டங்கள்...!! | 08 |
| ஹூஸ்டனில் "அரோஹரா"கோஷத்துடன் தைப்பூசக் கொண்டாட்டம் | 12 |
| பி.கே.எம். தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் | 14 |
| திட்டமிடு ...தொட்டுவிடு - சுகி.சிவம் | 22 |
| வேந்தன் ஆன்மா | 25 |
| பாரதியின் புதுமைகள் | 26 |
| மன்ற நிகழ்வுகள் - பொன்விழா ஆண்டு 2024 | 28 |
| தமிழோடு விளையாடு | 35 |
| சிகிச்சைக்கு சிகை - மனிதநேயத் துளிகள் | 36 |
| சிறகடிக்கும் வானம் | 37 |
| யார் பெரியவர்? | 37 |
| பி.கே.எம். கோல்டன் குரூப் கிளப் | 38 |
| பி.கே.எம். தமிழ்ச்சபை - இலக்கியக் குழு | 39 |
| பி.கே.எம். யூத் கிளப் | 40 |
| தங்க மகள்கள் | 41 |
| தங்க மகன்கள் | 44 |
| சிலேடை அணி என்றால் என்ன? | 45 |
| பாரம்பரிய அரிசியும், மருத்துவ குணங்களும் | 47 |
| பறை | 48 |
| ஜாடிக்கேத்த மூடி | 49 |
| சமைக்கலாம் வாங்க | 50 |
| நேர்மைக்கு பரிசு உறவு | 51 |
| சித்திரச் சாரளம் | 53 |



🙏 **Picture courtesy for BKM events by Thiru TA!**
**Thank you for your support always!** 🙏

# நான் ஆட்சி செய்து வரும் ஹூஸ்டன் மாநகரிலே



ஸ்ரீ சுந்தரேஸ்வரர்



ஸ்ரீ மீனாட்சி அம்மன்

சங்கத்தமிழ் வளர்த்த மதுரையிலே
எங்கும் நிறை ஆனந்த பூர்த்தியாய்
நிறைந்தாட்சி செய்பவளே
அங்கயற்கண்ணியே!
மறை போற்றும் மீனாட்சி தாயே!!
விரைவான பெருநகராம்- ஹூஸ்டன்
கரையோரம் குடிகொண்டு
புலம் பெயர்ந்த உம் குடிக்கு
வளம் சேர்த்து வழித்துணையாய்
பலம் சேர்க்க வந்த பரம்பொருளே! - நீ
வீற்றிருக்கும் திசை நோக்கி பாடுகின்றோம்
போற்றி போற்றி பலநூறு.

கயற்கண்ணி கடல் கடக்க எண்ணிடவே
அயல்நாடென்ன அண்டங்கள் கடந்தாலும்
அன்பே நான் என்றும் உன்னோடு
தண்டமிழும் தமிழனுமாய்
உன் இருப்பும் என் இருப்பும்
என்றென்றும் வேறில்லை
ஒன்றெனவே உலகுக்கு உணர்த்திடுவோம்
என்றோதி கொன்றை மலர் கோமானாம்
சொக்கனுமே உடன் உறைந்தார் காண்
பக்கத்துணையாய் பல்லக்கில்.

எக்காலம் நமை காக்க சிவசக்தி சேர்ந்திருக்க
மக்கள் நலம் பேணி
மாநிலமும் பயனுறவே
நானிலமும் நமைப் போற்ற
வாழ்ந்திடுவோம் தகைசார்ந்த தமிழினமாய்
கீழ்த்திசைக் கரையோரம்
கீர்த்திமிகு நகரினிலே.

**ராஜி வாஞ்சி**




### ஹூஸ்டன் பாரதி கலை மன்றத்தின்

# 2024 பொன் விழா ஆண்டு தொடக்க விழா மற்றும் கோலாகலப் பொங்கல் விழா கொண்டாட்டங்கள்...!!

ஜனவரி 20,2024ஆம் நாளன்று, ஹூஸ்டன் பாரதி கலை மன்றம் பொன்விழா ஆண்டின் தொடக்க விழா, பொங்கல் திருவிழாவோடு இணைந்து இரு விழாவாய் பெரு விழாவாய் மீனாட்சித் திருக்கோயில் திருமண மண்டபத்தில் மலர்ந்தது.

ஐம்பதாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இப்பொன்விழாத் தருணத்தில், ஐம்பூத நாயகன் அரங்கத்தின் வாசலிலே, ஐந்து கரம் நீட்டி அருள் பார்வையோடு வீற்றிருக்க, வானவில்லின் வண்ணக்கோலமாய் அவரை வட்டமடிக்கும் அலங்கார வளைவு வரவேற்க, நீள்கொம்பு நீட்டி நின்று, வால் சுழற்றும் வாகான காளையோடு வைக்கோல் சுமந்து நிற்கும் மாட்டு வண்டியும், கூரை வேய்ந்த குடிலொன்றும், குடை விரித்து ஊஞ்சல் ஆட கிளை பரப்பிய பெருமரமொன்றும் என்று கிராமத்து காட்சிகள் காண்பவர் கண்களை அகலப்படுத்த காத்திருந்தன.

தாமரைப் பூத்தத் தடாகமும், பின்னணியில் கோபுரவாசலும், கணீரென்று ஒலிக்கும் கவின்மிகு வெண்கல மணியுமாக கிராமத்தின் சன்னதித் தெரு மற்றொரு பக்கம் திருவிழா பூண்டிருந்தது.

பொங்கலிட்டு குலவையிடும் ஓசை கேட்கும்

தெற்கத்தி கிராமத் தெருவோர காட்சிகள் எல்லாம் தெற்கத்தித் திருநகராம் விண்வெளி ஏவுகளப் பெருநகராம் ஹூஸ்டனின் பாரதி கலை மன்றப் பொங்கல் விழாவின் வியப்புகள் இவை.

BKM ன் பொன்விழா ஆண்டுத் தலைவர். டாக்டர். விஜயா இராமச்சந்திரன் (திருமதி.விஜி திரு) வரவேற்பு மடல் வாசிக்க, அவரோடு இணைந்து இந்த ஆண்டின் செயற்குழு உறுப்பினர்கள் விளக்கேற்றி வைத்து பொங்கல் விழாவை இனிதாக தொடங்கி வைத்தனர்.

முப்பத்து ஐந்திற்கும் மேற்பட்ட குழுவினர் கலை நிகழ்ச்சிகளில் மாமதுரை மெச்சும் அன்னக்கொடி களாகவும், உள்ளங்கவர் ஒட்டுமீசை கறுப்புக் கண்ணாடி கதாநாயகர்களாகவும் வந்து நம் மனம் கவர்ந்தனர். அரங்கு நிறைந்து ஆரவாரத்துடன் எழுந்த கைத்தட்டல்களே இதற்கு சாட்சியானது.

கடந்த ஆண்டின் செயற்குழுவின் செயல்பாடுகளை கடந்த ஆண்டின் தலைவர் திருமதி. கங்காமலர் சிவப்பிரகாசம் பெருமைப்படுத்தியது சிறப்பாக அமைந்தது.

செவிக்கு உணவு கொடுத்ததோடு சிறுது வயிற்றுக்குமாக சிற்றுண்டி நேரம் தொடங்கியது. சர்க்கரைப் பொங்கலும், சுண்டலும் நம் தமிழ்நாட்டு கோயில்களை நினைவிற்கு கொண்டு வந்தது என்றால், முழுவீச்சில் மூச்சு முட்ட முட்ட அலை மோதிய கூட்டத்தால் பாவ் பாஜி அடுப்புப் பக்கம் அனல் பறந்தது எனலாம். சிற்றுண்டி மாராத்தான் நடத்தி விட்டது பாரதி கலை மன்றம் இவ்வருடப் பொங்கல் விழா கொண்டாட்டத்தில்.

பாரதி கலை மன்றத்தின் பொன்விழா ஆண்டின் தொடக்க விழாவின் சிறப்பு விருந்தினரான இந்தியத் தூதரகத் தலைவர் திரு.டி.சி. மஞ்சுநாத் அவர்களை தலைவர் திருமதி.விஜி திருவும், துணைத்தலைவர் திருமதி.அனிதா குமரனும் பொன்னாடை போர்த்தி வரவேற்றனர். இனிய நாதஸ்வர மங்கல இசையும், முழங்கிய கொம்பும், பறையிசையும், செண்டை மேளமும் ஒன்றிணைந்து உத்வேகமாக பொன்விழா ஆண்டின் தொடக்கப்புள்ளியாக ஒலித்தன.

இந்தியத் தூதரகத் தலைவர் திரு. டி.சி. மஞ்சுநாத் அவர்களின் முன்னிலையில், பாரதி கலை மன்றத்தின் இவ்வாண்டு தலைவர் திருமதி. விஜி திரு, 2024ஆம் ஆண்டின் செயற்குழு உறுப்பினர்களை அவையோருக்கு அறிமுகப்படுத்தி வைத்து சிறப்பித்தார். பொன்விழா ஆண்டின் அடையாளமாக சிறப்பு விருந்தினர் தலைவர் உள்ளிட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கு பொன்வண்ண ரோஜா மலரை அளித்து வாழ்த்தினார்.

இந்தியத் தூதரகத் தலைவரின் அழகிய அருந்தமிழ் சிற்றுரையைத் தொடர்ந்து, பொன்விழாவை காணும் நுண்கலை மன்றமாம் பாரதி கலை மன்றத்தின் பொன்விழா ஆண்டின் கோலாகலத் திருவிழாவைத் திரு.டி.சி மஞ்சுநாத் அவர்கள் தொடங்கி வைத்தார்.

பி கே எம்மின் முன்னாள் தலைவர்கள் பொன்விழா ஆண்டிற்கான பி கே எம்50 பதாகையையும், இலச்சினை முத்திரையையும் சிறப்பு விருந்தினரான இந்தியத் தூதரகத் தலைவர் திரு.டி.சி மஞ்சுநாத்திடம் கையளிக்க, அவர் அதை சீரிய முறையில் செயல்படுத்தும் பொறுப்பை பொன்விழா ஆண்டு தலைவர் திருமதி.விஜி திரு மற்றும் செயற்குழுவின்வசம் ஒப்படைத்தார்.

மேலும், பொன்விழா ஆண்டின் சிறப்பு அம்சமாக 'கோல்டன் குரூப் கிளப்' (BKM Golden Group) எனப்படும் மூத்தக்குடிமக்களுக்கான குழு; யூத் கிளப் (BKM Youth Club) என்னும் இளையர் அமைப்பு; 'தமிழ்ச்சபை' (BKM Tamil Sabai) என்னும் இலக்கிய குழு தொடங்கப்பட்டு அதற்கான ஒருங்கிணைப்பாளர் களிடம் வழங்கப்பட்டது.

பி கே எம்மின் புரவலரான திரு.ஏ.கே.சுப்ரமணியம் அவர்களும், பி கே எம்மின் முன்னாள் தலைவர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களும் கோல்டன் குரூப்பிற்கு மிகவும் உறுதுணையாக இருந்தனர். யூத் கிளப்பிற்கான இலச்சினை முத்திரையை உயர்நிலைப்பள்ளி மாணவி செல்வி. ஈஷாஜோதி பிரபாகர் வடிவமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பாரதி கலை மன்றத்தின் முன்னாள் தலைவர்கள் அடங்கிய பி கே எம்மின் தலைவர்களின் குழு உறுப்பினர்கள் தங்களின் முழு ஆதரவையும் நம் செயல்பாடுகளுக்கும் நிகழ்வுகளுக்கும் நல்குவதாக கூறி ஈடுபாட்டை காட்டுவது நம் மன்றத்திற்கு மாபெரும் பலமாக அமையும்.

வரவேற்பு நடனமாக திருமதி.வித்யா மதுபாலாவின் சடாஷ்ரமம் பரதநாட்டியமும், சங்கே முழங்கு என சபையோரை கட்டி வைத்த நடனமும் அவையோரின் கரவொலிகளால் பாராட்டுக்களை குவித்தன. முத்தாய்ப்பாக வந்த சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்தினர் முப்பதுக்கும் மேற்பட்டோர் வழங்கிய பாரம்பரிய நடனங்களான கூத்துக்கலையும், பொய்க்கால் குதிரையும், கரகமும், மயிலாட்டமும்,




ஒயிலாட்டமும், சிலம்பமும் சில நிமிடங்கள் காண்பவரை மெய் மறக்கச் செய்து சிலையாக்கி விட்டது. பக்கத்துக்கு நகரத்தில் இருந்து பயணித்து வந்து பாரதி கலை மன்றத்தின் பொன்விழா ஆண்டினை சிறப்பிக்க நம் பண்பாட்டு பாடல்களையும் ஆடல்களையும் அரங்கேற்றியது நெஞ்சிற்கு நெருக்கமான நிகிழ்வாக அமைந்தது.

இந்த ஆண்டு ஜூலை மாதம் வட அமெரிக்க பேரவை பேரவை விழாவை சிறப்பாக நடத்த பொறுப்பேற்றுள்ள சான் ஆண்டனியோ தமிழ்ச்சங்கத்தினர், பேரவை நிகழ்ச்சியின் சிறப்புகளைக் கூறி நேரில் வந்து வரவேற்றது மிக மகிழ்வான தருணம்.

கலை பண்பாட்டு நிகழ்வுகளோடு மொழிவளம் பேண பாரதி கலை மன்றம் ஐந்து வெவ்வேறு இடங்களில் தமிழ்ப்பள்ளிகளை நடத்தி வருகிறது. இந்த பொன்விழா ஆண்டில் தமிழ்ப்பள்ளிகளுக்கான சிறப்புப் பதாகை (banner), தமிழ்ப்பள்ளி இயக்குனர், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து மேடையில் வெளியிடப்பட்டது.

அரங்கத்தின் அடுத்த சுற்றில், பாரதி கலை மன்றம் பொங்கல் பரிசாக அளிக்கவிருக்கும் அழகிய புடவை, வேட்டிகளோடு வீற்றிருந்த மேசைகள் அனைவரையும் வருக வருகவென்று வரவேற்கும் திருவிழாக் கடைகளின் தொடக்கப் புள்ளியானது. இளைய தலைமுறையினரை சமூகத்தோடு இணைத்து செயலாற்ற இவ்வாண்டு அறிமுகப்படுத்தவுள்ள பாரதி கலை மன்றத்தின் இளையர் அமைப்பான ‘யூத் கிளப்’ பிள்ளைகள் நடத்திய மனம் கவர் பிஸ்ஸா கடை மிகுந்த களை கட்டியது. குழு தொடங்கிய நொடியே செயலில் ஈடுபட்ட செயல்வீரர்களுக்கு நம் பாராட்டுக்கள்.

அதைத் தொடர்ந்து தமிழகத்து அணிமணிகள், துணிக்கடைகள், சத்தான இயற்கைமுறை சிறுதானிய மாவுகள், செக்கு எண்ணெய் என நீண்டது திருவிழாக் கடைகளின் அணிவகுப்பு. மனமதை செம்மையாக்க யோக வகுப்பு அரங்கு முத்தாய்ப்பாக அமைந்தது சிறப்பு.

விழா வளாகத்தின் மாடிப்பகுதியில் கோலப்போட்டிகள் கோலாகலமாய் கோதையரை மகிழ்விக்க, மற்றொரு திசையில் உறியடித் திருவிழா உற்சாகக் கூவலாய் எதிரொலித்தது ஆண்களின் ஆரவாரக் கூட்டத்தில். பி கே எம்மின் பொங்கல் நிகழ்வில் முதன்முறையாக உறியடி விளையாட்டுகள் செய்யப்பட்டது பெரும் வரவேற்பைப் பெற்றது. கோலப்போட்டி பொங்கலுக்கு பாரம்பரியமாக அம்சமாக அமைந்தது. இது மிகவும் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டது. இந்த நிகழ்வுகளின் ஒருங்கிணைப்பாளர்களுக்கு நன்றி!

குழந்தைகளின் நடன நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து சிரிப்பலையை பரப்பி அனைவரையும் நகைச்சுவை மழையில் நனைய வைக்க மேடையேறினார்

தொலைக்காட்சிப் புகழ் நகைச்சுவைப் பேச்சாளர் திரு.ஆதவன். அடுத்த ஒரு மணிநேரத்திற்கு அரங்கத்தில் அடங்காது கேட்ட சிரிப்பொலியும், விசில் ஒலியும் பொங்கல் விழாவின் சிறப்பிற்கு கட்டியம் கூறின.

இந்த நிகழ்விற்கு வருகையும் ஆதரவும் தந்த அனைத்து பி கே எம்மின் உறுப்பினர்களுக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் அவர்களை உற்சாகமான ஈடுபடச் செய்த பெற்றோர்கள் முயற்சிக்கு பாராட்டுகளோடு கூடிய நன்றி!

இந்த நிகழ்வை மிகவும் பாராட்டத்தக்க விதத்தில் வழங்குவதற்கு 2024 ஆண்டின் செயற்குழுவின் பெரும் முயற்சிகள் பற்றி குறிப்பிடவும் இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொள்ளகிறோம். செயற்குழுவைச் சேர்ந்த ஒவ்வொருவரும் இந்த பொன் பொங்கல் விழாவை தங்கள் வீட்டுத் திருவிழாவாகக் கருதி, எங்கள் உறுப்பினர்களுக்கு வழங்க மிகவும் கடினமாக உழைத்த ஒரு பெரிய கொண்டாட்டம் இது! இந்த விழா மிக சிறப்பாக அமைய தங்கள் முழு ஒத்துழைப்பையும் பேராதரவையும் அளித்த தன்னார்வலர்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்!

தங்களின் பெரும் ஆதரவாலும், முயற்சியாலும், வருகையாலும் இந்நிகழ்ச்சியை வெற்றிகரமாக்கிய அனைத்து தமிழ்ப்பள்ளி ஒருங்கிணைப்பாளர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்! தங்கள் களப்பணியை உடனடியாக செய்து தங்கள் மகத்தான ஆதரவை வழங்கிய கிளப் ஒருங்கிணைப்பாளர்களுக்கு மனமார்ந்த நன்றி! குலுக்கல் முறையில் பரிசுக்கான பொருள்களை தாராளமாக வழங்கிய விற்பனையாளர்களை இங்கே நாம் நினைவுகூர கடமைப்பட்டுள்ளோம். குலுக்கல் முறை பரிசுகள் விழாக் கூட்டத்தில் பல முகங்களில் புன்னகையையும் பல கைகளில் பரிசுகளையும் தந்து மகிழ்வித்துள்ளது.

இந்நிகழ்ச்சியின் முதல் புள்ளி தொடங்கி முழுவதுமாய் நிறைவுப் பகுதி வரை சிறப்பாக நடை பெறுவதற்கு தங்களின் உழைப்பையும் ஆதரவையும் அளித்த அனைத்து தன்னார்வலர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்!

இந்த நிகழ்ச்சி நடத்த திரு மீனாட்சி கோயில் வளாகத்தை நமக்கு வழங்கி உறுதுணையாக இருந்த MTS தலைவர், திரு சுந்தர் அருண் அவர்களுக்கும் அவர்கள் செயல் குழுமத்திற்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்!

"பொங்கல் காட்சியமைப்பு" (Pongal Theme park) என்ற கிராமிய சூழலை கண் முன்னே காட்சிப்படுத்திய பிளாசம் டெக்கர் நிறுவனத்திற்கு நெஞ்சார்ந்த நன்றி பல. கண்கவர் காட்சிகளையெல்லாம் காமெரா கண் வழியே பதிவாக்கி காலத்திற்கும் அழியாத வரலாற்று சான்றாக்கிய கோல்டன் ரே போட்டோகிராஃபி நிறுவனத்திற்கும், இந்நிகழ்வின் செய்திகளை சன் டிவி, விகடன் முதலிய ஊடகங்களுக்கு கொண்டு செல்லும் திருமதி.விஜி ராஜாவிற்கும், ஆங்கிலச் செய்தித்தாளான இண்டியா ஹெரால்டு ஊடகத் தொடர்பாளர் திரு. சேஷாத்திரி குமார், அரசன் டிவி, தினமலர் முதலிய ஊடகங்களுக்கு எடுத்துச் செல்ல உதவும் சான் ஆண்டனியோவைச் சேர்ந்த திருமதி. ஷீலா ரமணனுக்கும் என்றும் நன்றி கூறி வணங்குகிறோம்.

2024 ஆம் ஆண்டின் பொன் பொங்கல் விழா சிறப்பாக நடந்தேற இந்நிகழ்வின் பெருங்கொடை யாளர்களாக (Event sponsors) திகழ்ந்த ஹூஸ்டன் நல்லி சில்க்ஸ், ஹூஸ்டன் தனிஷ்க் ஜூவல்லர்ஸ், குமார்ஸ் உணவகம் மற்றும் ப்ளாஸம் டெக்கார்ஸ் ஆகியோருக்கு பி கே எம் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து மகிழ்கிறது.

மாலை மயங்கி இரவின் முதல் அடிகளில் மூக்கைத் துளைத்தன அறுசுவை விருந்தின் மணம். குமார்ஸ் உணவகத்தின் உன்னதப் படைப்புகளாக பாதுஷா, வெஜிடபிள் பிரியாணி, தயிர்ப்பச்சடி, பரோட்டா, குருமா, தயிர் சாதம் உடன் ஊறுகாய், மோர் மிளகாய் என விருந்தே காத்திருந்தது. உணவு வேளையில் கிட்டத்தட்ட 1000 பேர் வரிசையில் காத்திருந்த நிலையில், கோலப்போட்டி, உறியடிப் போட்டி முடிவுகள் அறிவிப்பு காத்திருப்பின் களைப்பை சற்று கலகலப்பாகியது. கலகலப்பு கலையாமல் கான மழைத் தொடர்ந்தது. ஆம் ஆதவன் நகைச்சுவைத் தடம் மாற்றி இசைச்சுவைக்குள் நுழைந்து விட்டார் இப்போது. செவிக்குணவும் வயிற்றுக்குணவும் சமவேளையில் சரியாக நடந்தது சிறப்பான பொங்கல் விழாவில். ஆதவன் “கரோக்கி பாடல் இரவு” பல இதயங்களை கொள்ளையடித்தது! இசைக்கு இடையிடையே குலுக்கல் முறையில் பரிசு அறிவிப்பு வேறு சரியான பக்கவாத்தியமானது. பரபரப்பிற்கு பஞ்சமில்லை, கலகலப்பிற்கும் குறைவில்லையென கோலாகலமாக நடந்தேறியது ஹூஸ்டன் பாரதி கலை மன்றத்தின் பொன்விழா ஆண்டின் பொங்கல் விழா கொண்டாட்டங்கள். பாரதி கலை மன்ற வரலாற்றில் மிக சிறப்பு மிக்க தொடக்க விழாவாக இந்த பொன் விழா ஆண்டின் பொங்கல் விழா அமைந்து, அனைவரின் நெஞ்சினிலும் நீங்காத இடம் பெற்றது!

*ராஜி வாஞ்சி மற்றும் ஊடக உதவி:*
*ஷீலா ரமணன்*



# ஹூஸ்டனில் "அரோஹர"

## கோஷத்துடன் தைப்பூசக் கொண்டாட்டம்

இந்து பண்டிகையான தைப்பூசம் ஆண்டுதோறும் தமிழ் மாதமான "தை"யின் முதல் பௌர்ணமி தினத்தில் பூச நட்சத்திரத்துடன் இணையும் நாளில் கொண்டாடப்படுகிறது. இந்துக் கடவுளான முருகப்பெருமான் சூரபத்மன் என்கிற தீய அரக்கனை, தன் தாய் பார்வதி தேவியிடம் இருந்து பெறப்பட்ட சக்தி வாய்ந்த "வேல்" கொண்டு வீழ்த்திய வெற்றியைக் குறித்துக் கொண்டாடப்படுகிறது. பியர்லாந்தில் உள்ள ஸ்ரீ மீனாட்சியம்மன் கோயிலில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக மிகவும் பாரம்பரியமாக இவ்விழா கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு ஜனவரி 28, 2024 அன்றும் இந்த திருவிழா சிறப்பாக நடந்தேறியது.



திருமதி. பொன்னி சிவராமன்


ஆன்மிகக் கடனைச் சமன்படுத்தும் விதமாகவோ, பக்தியின் காரணமாகவோ அல்லது குணமடைய வேண்டிய அன்பர்களின் சார்பாகவோ பக்தர்கள் காவடிகள் மற்றும் பால்குடங்களை எடுத்துச் செல்வது இந்தத் திருவிழாவில் ஒரு சிறப்பு அம்சமாக உள்ளது. தைப்பூசத்திற்குத் தயாராவதற்கு ஒரு பக்தர் முந்தைய நாட்களில் விரதம் இருந்து, எளிய வாழ்க்கையை நடத்தி சாத்விக் உணவை மட்டுமே சாப்பிடலாம்.

காவடிகளைத் தாங்குவது, ஒவ்வொரு அடியிலும், முருகப்பெருமானுக்குச் செய்த வாக்கை நிறைவேற்றுவது அல்லது கடவுளுக்கு நன்றி செலுத்துவது என்பது ஒரு "தியாகத்தின் சின்னம்". தைப்பூசத்தின் சடங்கு பற்றி ஒருவர் அறிந்திருக்கலாம், ஆனால் காவடி "ஏன்" சுமக்கப்படுகிறது என்பது பலருக்கு தெரியாது. காவடி சுமக்கும் பழக்கம் புராணங்களில் இருந்து உருவானது. இது புனிதமான, பண்டைய சமஸ்கிருத நூல்களின் தொகுப்பில் காணப்படுகிறது.

புராணத்தின் படி, இடும்பன் என்ற அரக்கன், புனித அகஸ்தியரால் கயிலை மலைத் தொடருக்குச் சென்று இரண்டு மலைகளை எடுத்து வந்து அதை தெற்கே கொண்டு வந்து பிரபஞ்சத்தில் ஒரு சமநிலையை உருவாக்க அறிவுறுத்தப்பட்டான். இடும்பன், தெரியாமல் முருகப்பெருமானுக்கு சொந்தமான இரண்டு மலைகளை எடுத்து, அவற்றை ஒன்றாக இணைத்து, தோளில் சுமந்து செல்கிறான். அப்போது வழியை தவற விட்டு விடுகிறான்.

முருகப் பெருமான் இடும்பனுக்கு அரசன் வடிவில் தோன்றி, அவனை திருவாவினன்குடி (அல்லது பழனி) என்ற இடத்திற்கு அழைத்துச் செல்கிறார். அங்கு, இடும்பனிடம், அவனது பயணத்தைத் தொடரும் முன் ஓய்வெடுக்கச் சொல்கிறார். ஓய்வெடுத்து விட்டு, இடும்பன் மீண்டும் தனது சுமையை தூக்க முயற்சிக்கிறான், ஆனால் அவனால் அவற்றை தூக்க முடியவில்லை என்பதை உணர்கிறான்.







அப்போது, இடுப்பில் சிறு ஆடையோடு ஒரு குழந்தை ஒரு மலையின் உச்சியில் தோன்றி அதன் மீது உரிமை கோருகிறது. கோபமடைந்த இடும்பன் குழந்தையைத் தாக்குகிறான், ஆனால் தோற்கடிக்கப்படுகிறான். அந்தக் குழந்தை வேறு யாருமல்ல, முருகப்பெருமானே என்பதை அப்போது அவன் உணர்ந்தான்.

இடும்பன் முருகனின் கருணையையும் மன்னிப்பையும் வேண்டுகிறான். முருகப்பெருமானை, தோள்களில் இருந்து தொங்கவிட்ட இரு குன்றுகளைப் போன்ற ஒரு பொருளை ஏந்தி வழிபடுபவர்களின் மனப்பூர்வமான விருப்பம் நிறைவேறும் என்று தனக்கு வரம் தருமாறும் அவர் தெய்வத்திடம் வேண்டுகிறான். முருகப்பெருமான் இடும்பனுக்கு இந்த வரத்தை அளித்து, காவடியில் சந்தனம், பால் மற்றும் மலர்களை தனது சன்னதிக்கு எடுத்துச் செல்பவர்களுக்கும் புண்ணியம் கிடைக்கும் என்றும் கூறுகிறார்.

முருகப்பெருமான் அருள் பெற விரும்புவோர் காவடி சுமக்கும் வழக்கம் இன்றும் தொடர்கிறது. தெய்வத்திற்கு அபிஷேகம் செய்யப்படும் பால் நிரப்பப்பட்ட பால்குடத்தை பெண்கள் சுமந்து செல்வதும், ஆண்கள் காவடி ஏந்துவதும் வழக்கம்.

ஜனவரி 28 ஆம் தேதி காலை, பியர்லாந்தில் 45* டிகிரி குளிர்ந்த வானிலை இருந்தும் சுமார் 50 பாதயாத்திரைகள் தங்கள் சபதத்தை நிறைவேற்றுவதற்காக கோவிலுக்கு சுமார் 5 மைல் தூரம் நடந்து செல்வதைத் தடுக்கவில்லை. விரைவிலேயே 140 காவடிகள் மற்றும் 100க்கும் மேற்பட்ட பால்குடங்



களுடன் பக்தர்கள் ஊர்வலமாக "அரோகரா" சத்தத்தில் நனைந்தபடி கல்யாண மண்டபத்தை அடைந்தனர், அங்கு முக்கிய சடங்குகள் நடத்தப்பட்டன. மிகவும் பக்தியுடன் எடுத்துச் செல்லப்பட்ட பால், ஸ்ரீ சுப்ரமண்யர், அவரின் மனைவிகளான ஸ்ரீவள்ளி மற்றும் ஸ்ரீ தெய்வானைக் கான அபிஷேகத்தில் பயன்படுத்தப்பட்டது. தொடர்ந்து நடந்த அலங்காரம் மற்றும் ஆரத்தி, மனதை மயக்கும் வகையில் இருந்தது. மேலும் பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் மற்றும் அறுசுவை மதிய உணவு வழங்கப்பட்டது. அன்றைய தினம் பக்தி, ஆன்மீக நிறைவு மற்றும் திருப்தியுடன் கூடிய நாளாக அமைந்தது. கந்தனுக்கு அரோஹரா

# பியர்லாண்ட் பள்ளி ஆசிரியர்கள்

Coordinator -Pearland



Vandhana Ramamoorthy

AsstCoordinator-pearland



Akila Shanmugan

Pearland-Grade6



Kavitha Sivakumar

AsstGrade6 -Pearland



Vijaya Gnanasekaran

Asst teacher Grade5-Pearland



manjula Muruganandam

Pearland Grade 4



Suba Tanasekaran

pearland second grade



Raji saravanan

Pearland-Kinder



Subasri TirumalaKumara

# கேட்டி பள்ளி ஆசிரியர்கள்

**Principal**



Siva TG

**Asst Principal & Grade 2**



Manimegalai Gopalakrishnan

**Asst Principal & Grade 4**



Kavitha Saravanan

**Teacher Assistant**



Sanyuktha Navaneethan

**Teacher Assistant**



Subhasri

**Teacher Assistant**



Dhiom Harikrishnan

**Grade8**



Ilankuzhali Mani

**Grade7**



Kavitha Elakkiyaraja

**Grade 6**



Anantha Lakshmanan

**Grade 6**



Hemalatha Sivakumar

**Grade 5**



Anitha Selvaganeshan

**Grade 5**



Niveditha Raman

# கேட்டி பள்ளி ஆசிரியர்கள்

**Grade 4**



Jothi Babu Rao

**Grade3**



Mahalakshmi Karthi

**Grade3**



Sowmya Ganeshram

**Grade2**



Divya Arivalagan

**Grade 1**



Krithika Manoharan

**Grade 1**



Ponradha Ganesh

**Mazhalai**



Karthika Sathishkumar

**Kindergarten**



Swathy Ramesh

**Kindergarten**



Vijayaprabha Rajendran

# சைப்ரஸ் பள்ளி ஆசிரியர்கள்

**Coordinator**



Santhi
Parasu

**Assistant coordinator**



Thilak
Chinnadurai

**Grade : Pre-K**



Ramya
Mayilswamy

**Grade: Pre-K Asst. Teacher**



Madhu Mathi
Thangavel

**Grade: KG**



Deepika
Kanagaraj

**Grade: KG Asst. Teacher**



Navya Selvaraj
Vijayanand

**Grade: 1**



Rajalakshmi
Athava

**Grade: 1 Asst. Teacher**



Rithanya
Shanmuganathan

**Grade: 2**



Divya
Suresh

# சைப்ரஸ் பள்ளி ஆசிரியர்கள்

Grade: 2 Asst. Teacher



Preethi Gurunathan

Grade: 3



Sudhakar Viswanathan

Grde: 3 Asst. Teacher



Shreyas M Rajagopal

Grade: 4



Aruna Sundarakumar

Grade: 4 Asst. Teacher



Rachel Prakasham

Grade: 5



Santhi Parasu

Grade: 6



Kanimozhi Natarajan

Grade: 5 Asst. Teacher



Savitha vidyaprakash

Grade: 6 Asst. Teacher



Kousalya Damotharan

Grade: 7



Sobana Doraiswamy

Grade: 7 Asst. Teacher



Gayathridevi Kumanan

Grade: 8



Geetha Kunjaramanoharan

Grade: 8 Asst. Teacher



Sivagami Balaji

# சுகர்லாண்ட் பள்ளி ஆசிரியர்கள்

**ஒருங்கிணைப்பாளர்**



ரெங்கநாயகி
பாண்டுரெங்கன்

**துணை ஒருங்கிணைப்பாளர்**



மகேஷ்
பெரியசாமி

**துணை ஒருங்கிணைப்பாளர்**



கீதா
விநாயகமூர்த்தி

**பாலர் பள்ளி**



சுஜாதா
சீதாராமன்

**பாலர் பள்ளி 2**



ஹேமா
நரேன்

**மழலையர் பள்ளி**



முல்லை
முருகன்

**மழலையர் பள்ளி**



ரம்யா
கிருஷ்ணகுமார்

**உயர் மழலையர் பள்ளி**



ஆர்த்தி
கோபி

**உயர் மழலையர் பள்ளி**



ஜானகி
சண்முக சுந்தரம்

**வகுப்பு 1**



உமாமகேஷ்
ராமகிருஷ்ணன்

**வகுப்பு 1**



ரம்யா
விஸ்வநாதன்

# சுகர்லாண்ட் பள்ளி ஆசிரியர்கள்

வகுப்பு 2



சுகன்யா
சதீஷ்

வகுப்பு 2



காயத்திரி
தியாகராஜன்

வகுப்பு 3



வாணி
எம் சீனிவாசன்

வகுப்பு 3



பிரமிளா
பத்மநாபன்

வகுப்பு 4



ஜீவன்
பிரசாத் சேகர்

வகுப்பு 5



சுதா
யுவராஜ்

வகுப்பு 6



சேவியர்
ராஜ்

வகுப்பு 7



ரவிசங்கர் பெரியசாமி

வகுப்பு 7



நித்யா
அசோக்குமார்

வகுப்பு 8



குமரன்
சிவப்பிரகாசம்

# ஹூஸ்டன் பள்ளி ஆசிரியர்கள்

**Coordinator Teacher & Mazhlai**



**Sridevi Perumal**

**Asst Coordinator Teacher & Grade 6**



**Santhana Lakshmi Meenakshi Sundaram**

**TA - Grade1**



**Akshatha Perumal**

**TA - Grade 1**



**Heera Sabarigiri**

**Teacher - Grade 2**




**Rani Senthil**

**TA - Grade 3**



**Reshmika Sabarigiri**

**TA - Grade 3**



**Karnikha Saravana Kumar**

**Teacher - Grade 3**



**Shakila Nirmalraj**

**TA - Grade 4**



**Jennardhan Narayanan**

**Grade 5 teacher**



**Nirmala Rajeshprabu**

**Teacher - Grade 4**



**Chandra Anand**

**TA - Grade 6**



**Dharshan Arputhanandhan**

**TA - Grade 6**



**Krishnaraj Narayanan**



கட்டுரை

# திட்டமிடு... தொட்டு விடு

**சுகி.சிவம்**

நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன், மயிலாப்பூரில் சில சில எருமைகள் படுத்திருக்கும். ரொட்டிக்காரத் தெருவில், ஓட்டுவீட்டில் குடியிருந்தோம். என் அப்பா கலைமாமணி டி.என். சுகி. சுப்ரமணியன் எழுத்தாளர், அகில இந்திய வானொலி நாடகத் தயாரிப்பாளர் என்கிற வெளிச்சங்கள் பெற்றவர். என் அப்பாவை அமரர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஒரு கதை விஷயமாகப் பேச தமது ராமாவரம் தோட்டத்திற்கு, காலை உணவுக்கே வரும்படி அழைத்திருந்தார். ஆனால் முதல்நாள் இரவு ஏழுமணி அளவில் அம்பாஸிடர் கார் ஒன்று எங்கள் வீட்டுவாசலில் வந்து நின்றது. இறங்கிய ஓட்டுநர் ஒரு சிறிய பழக்கூடையைக் கொடுத்துவிட்டு “ராமாவரம் தோட்டத்தில் இருந்து வந்திருக்கிறேன்” என்றார்.

அப்பா பதற்றமாகிவிட்டார். மறுநாள் காலை எட்டா? அன்று இரவு எட்டா? தாம் தவறுதலாகக் காதில் வாங்கி விட்டோமோ என்று பதட்டத்துடன் “நாளை காலை எட்டு மணி என்று தானே சொன்னார்கள்?” என்றார். ஓட்டுநரோ “ஆம் ஐயா.. காலையில் வருகிற வழி தெரியாமல் நான் தாமதமாகிவிடக் கூடாதல்லவா? வீடு தெரிய வேண்டுமே.. முன்கூட்டியே உங்களுடன் நான் அறிமுகமாவது நல்லதல்லவா? சின்னவரைக் காக்க வைக்க முடியாதல்லவா.. அதனால் நேரில் வந்து எல்லாவற்றையும் முன்கூட்டியே உறுதி செய்து கொண்டேன். தோட்டத்தின் நடைமுறை அப்படி.. என்றார். முன்னேற்பாடு, திட்டமிடுதல் பற்றி நான் படித்துக் கொண்ட முதல் பாடம் இந்தச் சம்பவம். அதனால்தான் எம்.ஜி.ஆர் அவர்களை வாத்யார் என்றார்களோ? இருக்கலாம்

திருப்பத்தூரில் ரகுநாயகம் என்றொரு இலக்கிய ஆர்வலர் வாழ்ந்தார். செல்வமிக்கவர். பண்பாளர். அவரது வீட்டில் எங்களுக்கு (சிலபேச்சாளர்கள்) மதிய உணவு. உணவு முடிந்து பேசிக் கொண்டிருக்கும் போதே ஒவ்வொருவர் கையிலும் ஒரு கவர் கொண்டு வந்து கொடுத்தார்கள். பேச்சு முடிந்த பின் சன்மானக் கவர் தருவார்கள். உள்ளங் ’கவர்’ கள்வன் என்பது எங்கள் பரிபாஷை. அதுதான் முன்னாலேயே தருகிறார்களோ என்று பார்த்தால், இல்லை. இவை பழைய தபால் கவர்கள். உள்ளே எதுவுமில்லை..காலி கவர்.. ஒரு நிமிடம் எதுவும் புரியவில்லை. ரகுநாயகம் அவர்களுக்கு வந்திருந்த கடிதங்களின் வெற்றுக் கவர் நமக்கு எதற்கு என்று திகைத்தோம். பின்னாலேயே தட்டு நிறைய திராட்சைகள் கொத்துக் கொத்தாகக் கொண்டு வந்து வைத்தார்கள். இப்போது மாதிரி விதையில்லா திராட்சை (சுவையில்லா வாழ்க்கை) அப்போது கிடையாது. ஒரு வினாடியில் மின்னலடித்தது.. திராட்சை விதைகளைத் துப்புவதற்குத் தான் அந்தக் காலி கவர்கள். அடேயப்பா என்னமான திட்டமிடல்.. முன்னேற்பாடு..

பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் வரிசையில் லேனா தமிழ்வாணன் மிகமிக நேர்த்தியான மனிதர். ஒருபோதும் விழாக்களுக்கு அவர் தாமதமாக வந்ததாகத் தகவல் இல்லை. 6.00 மணி விழா என்றால் 5.55 க்குச் சரியாக ஒரு கதாநாயகன் மிடுக்குடன் உள்ளே வந்துவிடுவார். இந்தச் சென்னை போக்குவரத்து நெரிசலில் எப்படி சாமி *Punctual* ஆக

இருக்கிறீர்கள்?" என்று கேட்டபோது

"பதினைந்து நிமிடம் முன்னரேயே வந்து மண்டபம் வாசலில் காரை நிறுத்திவிட்டு காத்திருப்பேன். குறித்த நேரத்தில் உள்ளே வருவேன்" என்றார் அந்தக் கடிகார மனிதர்.



கடிகாரமுள்ளுக்குக் கால் கை முளைத்த மாதிரிதான் அவரை நான் ரசிப்பேன். *Time Management*

என்பது தான் சரியான திட்டமிடலின் சாரம். வாழ்வின் சகல விஷயங்களையும் இப்படி மிக நேர்த்தியாகத் திட்டமிட்டவர்கள் நிச்சயம் வெற்றியாளர்கள்.

வெளியூர், வெளிநாடு பயணிக்கும் பலரும் சரியான திட்டமிடல் இன்றி பெட்டி அடுக்காமல், டிக்கட், சில்லரைப் பணம், தண்ணீர் பாட்டில் எல்லாவற்றிலும் தடுமாறி தவிதவிப்பார்கள்.

நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று படுத்துத் தூங்கிவிட்டு, காலை புறப்படும்போது போரே நடத்துவார்கள். செல்ஃபோன் சார்ஜரைத் தூக்கில் தொங்கவிட்டு விட்டு மறந்து புறப்படுவார்கள். வழி யெல்லாம் பிச்சை எடுப்பார்கள்.

சுவாமி சின்மயானந்தா அவர்கள் பற்றி சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று என் நண்பர் சொன்னார். சுவாமி அவர்கள் துல்லியமாகத் திட்டமிட்டுதான் எதையுமே செய்வார்.. பேச்சுகூட படு *Planned*.. பேச்சின் நடுவே மூக்கடைப்பைத் தவிர்க்க சில சமயம் பொடி போடுவார். அது கூட எப்போது என்பது திட்ட மிடப்பட்டிருக்கும். ஒரு நகைச் சுவையில் மக்கள் கட்டவிழ்ந்து சிரிக்கும் கணத்தில் கச்சிதமாகப் பொடிபோட்டு முடித்து விடுவார்.

அவர் மதுரையில் தம் உரைகளை முடித்துக் கொண்டு காலை விமானத்தில் கிளம்ப வேண்டும். இரவே எழுத்து, நிர்வாகம் போன்ற சகல பணிகளும் கச்சிதமாகத் திட்டமிட்டபடி முடித்து விட்டார். காலை உடுத்திச் செல்லும் துணிமணிகள் பெட்டியின் மேலேயே வைக்கப்பட்டிருந்தன. அவர் உடுத்தும் கௌபீனம் (உள்ளாடை) கூட மேலே பளிச்சென்று பலருக்குத் தெரியும் படி வைக்கப்பட்டிருந்தது. உதவி செய்யும் அன்பர், பலர் வந்து போகும் அறையில் பார்வையில் படும்படி கௌபீனம் இருக்க வேண்டாமே என நினைத்து அதை மட்டும் எடுத்து பெட்டிக்குள் வைத்து மூடினார். கவனித்து விட்ட சின்மாயனந்தா சிரித்தபடி "அதை மேலேயே வை" என்றார். நண்பர் சாமர்த்தியமாக "அது உள்ளாடை.. வெளியே தெரியக்கூடாது. உள்ளேயே இருப்பதுதானே சரி" என்றதும் சுவாமி நகைச்சுவையை ரசித்துவிட்டு "நான் சந்நியாஸி.. சந்யாஸியின் கௌபீனம் வெளியே தெரியலாம்" என்று பதிலடி கொடுத்துவிட்டு மேலே எடுத்து வைத்து விட்டார். காலை புறப்படும் போது பரபரப்பின்றி படபடப்பின்றி பயணம் போகத் துல்லியமான இந்தத் திட்டமிடல் அவசியம் என்கிறேன்.

கழிவறையை உபயோகப்படுத்திவிட்டு 'அய்யய்யோ தண்ணீர் குழாய்ல வரலியே' என்கிற ஜனசமூகத்திடையே

> "அப்பா எப்போதும் சலவைக்கு துணிகளை வாங்கும் போது, முன்னும் பின்னும் திருப்பி சரி பார்ப்பார்" என்று! "சரி! இது நமக்கு கிடைத்த முதல் பாடம்"

திட்டமிடுதலின் அவசியம் சொல்லித்தர வேண்டியுள்ளது. பாத்ரூமில் இருந்து சிலர் துண்டு எங்கே என்று கத்துவார்கள். இவர் என்ன அரசியல்வாதியா என்ன? போகிற இடத்தில் எல்லாம் யாராவது வந்து துண்டு போர்த்த. நாடு வளர மட்டுமல்ல.. வீடு வளர தனிமனிதன் முன்னேற ஐந்தாண்டுத் திட்டங்கள் நாட்டுக்குமட்டுமல்ல.. வீட்டுக்கும் அவசியம். தனிமனிதனுக்கும் அவசியம் என்கிறேன்.

வின்ஸ்டன் சர்ச்சில் தாம் பேசப்போகும் பேச்சை உதவியாளருக்கு *Dictate* செய்யும் போதே இடை இடையே *"Pause'* என்பாராம். எதற்கு இடைவெளி என்று உதவியாளர் கேட்டபோது.. இங்கெல்லாம் மக்கள் கைதட்டுவார்கள்.. அதற்கு நேரம் கொடுக்க வேண்டும் என்றாராம். என்ன துல்லியமான கணிப்பு.. திட்டமிடல்.. பல தேசத்தலைவர்கள் உலகத்தலைவர்களாக உயர்த்தப்படவில்லை.

தாமாகவே உயர்ந்தார்கள். வளர்ந்தார்கள். உருவாகினார்கள். தங்களைத் தாங்களே உளியும், வலியும் கொண்டு செதுக்கிக் கொண்டார்கள்.

ஏப்ரல் 27,1971 இந்திய அமைச்சரவை பாரதப் பிரதமர் இந்திரா அம்மையார் தலைமையில் கூடியது. அப்போது பாகிஸ்தான் கிழக்கு, மேற்கு என்று இந்தியாவுக்கு இரட்டைத் தலைவலியாக நோய் கொடுத்த நேரம். பங்களாதேஷாக கிழக்குப் பாகிஸ்தான் பருவமடைந்தால் நல்லது என்று நினைத்த இந்திராஜி, இந்தியத் தலைமைத் தளபதியாக இருந்த

சாம் மானெக்ஷா அவர்களை உற்றுநோக்கி "What can the army do General?" என்று எதிர்பார்ப்புடன் கேட்டார். 'Nothing at Present' என்று மிடுக்குடன் சொன்னார் மானெக்ஷா. இந்திராஜியை எதிர்த்துப் பேச சக அமைச்சர்களே பயந்த கால கட்டம் அது. ஒரு தளபதி இப்படிப் பேசுவதா என்று அரசியல் ஜால்ராக்கள் ஓசை எழுப்பின.



மானெக்ஷா அசரவில்லை. "என் படைகளைப் பற்றி தலைவனான நான் அறிவேன். அவர்கள் பலசாலிகள். ஆனால் இப்போது, மழைக்காலம் வங்கதேசத்தில் தொடங்கிவிடும். அது

சதுப்புநிலம். அதனால் தரைப்படை முன்னேறத் தடையாக இருக்கும்.

மேலும் என் படைகளில் பெரும்பகுதியை மேற்குப் பாகிஸ்தான் எல்லையோரம் பாதுகாப்பு கருதி நிறுத்தி உள்ளேன். அவை வங்கதேசம் வந்துசேர எனக்கு 2 மாத அவகாசம் தேவை. எனவே தற்போது போர் வேண்டாம். குளிர்காலத் தொடக்கத்தில் வைத்துக் கொள்வோம்', என்றார். சொன்னபடியே கிழக்குப் பாகிஸ்தான் ராணுவத் தளபதியைத் தமது 90,000 வீரர்களுடன் இந்தியாவிடம் சரணடைய வைத்தார் மானெக்ஷா. காலமறிதல் என்பது இதுதான்.

இன்று இளைஞர்கள் பலரும் எதையும் திட்டமிடுவதில்லை. அதனால் பலராலும் சிகரங்களை எட்ட முடியவில்லை. என்ன படிக்கப் போகிறோம்? ஏன்? எவ்வளவு பணம் செலவாகும்? காலக் கணக்கு என்ன? டிரஸ்க்கு, சினிமாவுக்கு, பொழுது போக்குக்கு எவ்வளவு செலவழிக்கலாம்? நேரம் ஒதுக்கலாம்? எதிலும் பலருக்குத் தெளிவில்லை. பிள்ளைகளைக் கைநீட்டி அடிக்கக் கூடாது என்கிற மேலைநாட்டுச் சட்டங்களை இங்கே மேற்கோள் காட்டுகிற நீதிமான்கள் ஒன்றை மறந்து போகிறார்கள். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பதினைந்து வயதானதும் பிள்ளைகளை அவிழ்த்து விட்டுவிடுகிறார்கள். படிக்கவோ, வளரவோ அப்பனும் அம்மாவும் சல்லிக்காசு தருவதில்லை. காடுகழனி, வீடு நகை விற்று கலியாணம் கட்டித் தருவதில்லை. அடிக்காதபடி பிள்ளை வளர்ப்பதுதான் நல்லது.. ஆனால் உருப்பட மறுப்பதை அப்படியே விடுவதா என்ன? 'சவுக்கின் நிழலைப் பார்த்து ஓடும் குதிரைகள் குறைவு' என்பதை மேலைநாட்டு மேற்கோள் மூளைகள் கொஞ்சம் உணர வேண்டும்.

தன்னுடைய நண்பனைப் பிரியக்கூடாது என்ற பாசத்தால் அவன் படிக்கும் சப்ஜெக்ட்டை, அவன் படிக்கும் கல்லூரியில் அவன் படிக்கும் வகுப்பில் தான் படிப்பேன் என்று அடம்பிடிக்கும் அசடுகளை, திட்டமிடுதலில் தெளிவில்லாத பிள்ளைகளை அப்படியே விட்டுவிட முடியுமா என்ன? கண்டிக்க வேண்டியது நம் கடமை.

ஏவுகணைகள் குறித்த இடத்தை மட்டும் எப்படித் தாக்கு கின்றன? விண்கலன்கள் குறித்த பாதையில் எப்படிப் பயணிக் கின்றன? செவ்வாய் நிலப்பரப்பில் மங்கள்யான் கால் ஊன்ற எத்தனை மூளைகள் திட்டமிட்டிருக்க வேண்டும்? புறப்பட்ட நாளிலிருந்து சுமார் ஒரு வருடகாலம் இயங்கி 225 மில்லியன் கிலோ மீட்டர் பயணித்து, மணிக்கு 600 முதல் 700 கி.மீட்டர் வேகத்தில் பறந்து அது செவ்வாயின் கன்னங்களை வருடவேண்டி உள்ளது என்றால் எப்பேர்ப்பட்ட திட்டமிடல் தேவைப்படுகிறது. விண் வெளி வீரர்களின் பாராட்டு விழா ஒன்றில் டாக்டர் அவ்வை நடராஜன் அவர்கள் ஒரு திருக்குறளை மேற்கோள் காட்டினார். விண்வெளிப் பயணத்தை விவரிக்கும் குறள் என்றே சொல்லலாம்.

> "ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
> வானம் நணிய துடைத்து."

என்பது அந்தக் குறள்.

குறளை, "மோட்ச யோகத்தின் வழிகாட்டி" என்கிறது பழைய உரை. அது மெய் ஞானம். இலக்கு வானத்தில் இருந்தாலும் சரியான திட்டமிடலால் அடையாளம் என்பது புதிய உரை. இது விஞ்ஞானம். இது பற்றி இன்னும் கொஞ்சம் பேச வேண்டி உள்ளது.




# வேந்தன் ஆன்மா

பண் அமைத்த பாணர்க்குப் பொன் கொடுத்தான்.
புண்பட்ட கன்றுக்கு தன் புதல்வனைக் கொடுத்தான்.

தன் காலம் தாண்டி தமிழ் வாழக் கனி கொடுத்தான்.
தொண்டாற்றி தமிழ்ப் பண்பாட்டை உயர்த்திப் பிடித்தான்

கோட்டாலே மூன்று நாடாகப் பிரிந்து இருந்தாலும் - தமிழ்க்
கோட்பாட்டால் இணைந்தே இருந்தான்.
கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய், கேளாரும் கேட்க
வெண்பாக்கள் திரட்டி சங்கம் அமைத்தான்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வந்த தமிழ் - இன்று
கல் மறைந்தும் மண் மறைந்தும் கான்கிரீட்டால் புவி நிறைந்தும்
மரிக்காமல் மறையாமல் நெடுங்காலம் உடன் வாழ
அன்றே வழி அமைத்தான், உயிர் கொடுத்தான் தமிழ் வேந்தன்

மண்ணில் தான் மறைந்தாலும், மொழி
விண்ணைத் தொட வேண்டுமென அவன்
கண்ணாகக் கருத்தாக வளர்த்த தமிழ் இன்று

நம் வாயில் படும்பாட்டைக் கண்டாலோ கேட்டாலோ
வெம்பாமல் இருக்காதோ வேந்தன் ஆன்மா

ப்ரோ வாக ஜீ ஆக நாம் மாற நாம் மாற
தோழா-வும், நண்பாவும், காணாமல் தான் போகும்



ஜீவன் பிரசாத்
சுகர்லாண்ட், டெக்சாஸ்.

நன்றி சொல்லி நன்றி சொல்லி நாம் பேச
நாளாக நாளாக நன்றியும் மறந்து போகும்

நாலடியும் ஈரடியும் நாளடைவில் அழிந்து போக
"கீழடியில் கிடைத்த"தென இன்றைய தமிழ் ஆகிவிடுமோ?
கூடாது கூடாது விழி தமிழா! நினைவில் கொள்.

சந்திராயன் வென்றாலும் நாம் புதன்வாசி ஆனாலும்
'என் வாழ்வும் என் வளமும் மங்காத தமிழ்' என்று
அன்றாடம் உரையாடு எந்நாளும் தமிழ் புகழ் பாடு.



# பாரதியின் புதுமைகள்



**ஜெயா மாறன்,**
**அட்லாண்டா, ஜார்ஜியா**

முதலில் பொன்விழாக் காணும் ஹூஸ்டன் பாரதி கலைமன்றத்திற்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாரதியுடைய கருத்துகள்/எழுத்துகள் எப்பொழுதுமே புதுமையானவை தான். அவர் காலத்தில் இருந்த சமுதாயச் சிக்கல்கள் இன்றும் முழுமையாகத் தீர்க்கப்படாமல் வெவ்வேறு வடிவங்களில் இருப்பதால், அன்றே தொலைநோக்குப் பார்வையோடு அவர் சொன்ன தீர்வுகள் இன்றும் தேவையாய் இருக்கினறன. அப்படி, அவர் தன்னுடைய வாழ்க்கையின் வழியாக, அவர் எழுதிய கதைகள்/கட்டுரைகளின்வழியாகக் காட்டிய தீர்வுகளை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கடவுளின் பெயரைச் சொன்னாலே பயந்து மறு சிந்தனையே இல்லாமல் எதையும் நம்பி விடுகின்றனர் மக்கள். கிளிக்கதை என்றோர் அருமையான கதையில் இரண்டு போலியான கிளிக்கூண்டு சாமியார்களைப் பற்றி அப்பட்டமாகவும் நகைச்சுவையாகவும் எழுதியிருப்பார். கும்பிடுபவர்கள் எல்லாம் அடிமைகள். தான் மட்டுமே தெய்வாம்சம் பொருந்தியவர் என்று சொல்லி நடித்துப் பணம் பறிப்பவர்களை நம்பாதீர்கள் என்று சொல்லியிருப்பார். இதை மட்டும் நாம் புரிந்து கொண்டிருந்தால் கடவுளின் பெயரைச் சொல்லி எங்களை ஏமாற்றவே முடியாது என்று அவர்களுக்கு உணர்த்தியிருப்போம். கிளிக்கூண்டு கார்ப்பொரேட் ஆகியிருக்காது.

நம்மையுமறியாமல் சிறு குழந்தைகளிடம் கூட மூடப்பழக்கங்களைப் புகுத்திவிடுகிறோம். அதைப் பாரதி எப்படிக் களைகிறார் பாருங்கள்? குளத்தைத் தூர் எடுப்பவர்கள் தம் துன்பத்தைத் தீர்த்துக் கொள்வார்கள் என்ற நல்ல எண்ணத்தில் குளத்தில் காசு போடும் வழக்கம் இருந்தது. அதைத்தவறாகப் புரிந்து கொண்டு, காசு போட்டால் நல்லது என்றஎண்ணத்தில், எந்த நீர்நிலையைப் பார்த்தாலும் மக்கள் காசுகளைப் போடத் தொடங்கினர். யதுகிரியும் (பாரதி தன்மகளைப்போல நேசித்த சிநேகிதி) தன் தாய் சொன்னதால் கடலுக்குள் காலணாவைப் போட்டாள். குளத்தில் போட்டால்தூர் எடுப்பவர்களுக்கு உதவும். கடலில் போட்டால் எந்தப் பலனும் இல்லை. யாரும் கடலைச் சுத்தம் செய்வதுமில்லை, தூர் எடுப்பது மில்லை என்று விளக்கிக் குழந்தைகளுக்கு மூடப்பழக் கங்களைப் பழக்கக்கூடாது என்று உணர்த்தினார். இன்றைய குழந்தைகள் ஏன், எதற்கு என்று கேட்டால் அறிந்து வந்து சொல்ல இது போன்ற பாடங்கள் நமக்கே தேவை.

பெண் விடுதலையைப் பற்றிப் பாரதி பேசியதைநா மறிவோம். நிவேதிதா அம்மையார் மட்டுமல்ல, 'தள்ளு வண்டியில் காய்கறி விற்று நாலணா சம்பாதிப்பவர் கூட, வீட்டில் சோறாக்கி, துணி துவைத்து, பிள்ளை வளர்க்கும் தன் மனைவியை மதிப்பதில்லை, இதைப் பற்றி நீங்கள் பேச வேண்டும்' என்று பாரதி வசித்த ஊரில் வசித்த ஒருவிதவைத்துறவியும் பெண் விடுதலையைப் பற்றிப் பேசத்தூண்டியிருக்கிறார்.

பாம்பாட்டி, வண்ணான், நெல்குத்தும் பெண்கள், செம்படவர்கள், உழவர்கள் போன்ற உழைப்பாளிகளோடு கலந்துபழகியவர் பாரதி. வித்தியாசம் பார்க்காமல் இவர்கள் தருவதை வாங்கிச் சாப்பிட்டார். இந்த மக்கள் பாடிய பாடல்களை உற்றுக்கேட்டு ரசித்து, அதே மெட்டுகளில் பல பாடல்களை உருவாக்கிப் பாடியவர். கிருத்தவர்களாயினும், பார்சிக்களாயினும், முகமதியர்களாயினும் எங்கிருந்து வந்துளந்த இஷ்ட தெய்வத்தைக் கொண்டாடிய போதிலும், பாரத பூமியிலே பிறந்து வளர்ந்து இதையே சரணாகக் கொண்ட மனிதர்களை எல்லாம் பாரத சாதியிலே சேர்த்துக் கணக்கிடவேண்டும். இது ஒரே ஜாதி, இது பிரிவில்லாதது, அழிக்கமுடியாதது என்று நம் மனதில் பதியும்படிச்

சொல்லிச்சென்றிருக்கிறார் பாரதி.

உலகத்தாருக்கு வியாபாரம், கைத்தொழில், புதிய கண்டுபிடிப்புகள், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, விண்வளி என்று அறிவுவளர்ச்சி கூடிக்கொண்டே போகின்றது. அறநூல்கள் கூறும் உண்மை ஆன்மீகம், உலக ஒற்றுமை, பெண் விடுதலை போன்றவற்றையும்நாமறிவோம். ஆனால் அறிவால் உணர்ந்தவற்றை, ஒழுக்கத்தால் நடத்திக் காட்ட முடியவில்லை நம்மால். ஏன்? இரண்டேகாரணங்கள். ஒன்று பயம். மற்றொன்று கவலை. காலங்காலமாக நடப்பதை நான் மாற்றினால் சமுதாயம் ஏற்றுக்கொள்ளுமா என்றபயம். எல்லாம் இருப்பவருக்கும் கவலை. எதுவும்இல்லாதவருக்கும் கவலை. இருக்கிற கவலையோடு இதுவும்சேர்ந்துகொள்ள வேண்டுமா? என்ற கவலை.

பாரதி சொல்கிறார், வாருங்கள்! வாருங்கள்! அண்ணன்மார்களே! தம்பிமார்களே! ஓரிருவர் நேர்மை வழியில்செல்லும்போது தடைகள் வரலாம். நாம் கூட்டமாக நேர்மைவழியில் புகுவோம். ஆண் பெண் சமத்துவம் சரியென்று தெரிகிறதா? சாதி பேதங்கள் பயனில்லை என்று தெரிகிறதா? நிற வேற்றுமை, தேச வேற்றுமை பயனில்லை என்று தெரிகிறதா? நல்லது. வாருங்கள், கோடிக்கணக்காக சமத்துவ நெறியில்புகுந்துவிடுவோம். பழைய கட்டுகளை நாம் கூடி நின்றுதகர்ப்போம். தெய்வம் விட்டதே வழி என்று தைரியமாகச் செயல்படுவோம். இது கலிகாலம் என்று குற்றம்சொல்லிக்கொண்டே இருக்கவேண்டாம். இந்த அநியாயத்தைவிட்ட அடுத்த கணம் நாம் இந்தக் கலியுகத்தில் இருந்துகிருதயுகத்துக்குப் போய்விடலாம். இப்படித்தான் நாம் கலியைக்கடக்க வேண்டும் என்றார்.



வாருங்கள்! பாரதி காட்டிய புதிய வழியில் கலியைக்கடப்போம்!










# மன்ற நிகழ்வுகள் –
# பொன்விழா ஆண்டு 2024



BKM GOLDEN JUBILEE YEARPONGAL FESTIVAL - 1/20/2024




BKM GOLDEN JUBILEE YEAR INAUGURAL FUNCTION – 1/20/2024




BKM GOLDEN JUBILEE YEAR BKM50 LOGO INAUGURAL FUNCTION – 1/20/2024




**BKM YOUTH CLUB INAUGURAL FUNCTION – 1/20/2024**



**BKM LITERARY CLUB INAUGURAL FUNCTION – 1/20/2024**



**BKM GOLDEN GROUP CLUB INAUGURAL FUNCTION – 1/20/2024**




**BKM TAMIL SCHOOL BANNER INAUGURAL FUNCTION – 1/20/2024**




**AADHAVAN STAND -UP COMEDY/ KARAOKE SHOW -1/20/2024**



**BKM PONGAL KOLAM COMPETITION – 1/20/2024**



BKM PONGAL URIYADI – 1/20/2024



Thiru. SAM KANNAPPAN - 80th BIRTHDAY - FELICITATION by BKM – 1/13/2024



BKM MOVIE NIGHT AYALAAN TAMIL MOVIE 1/13/2024




**BKM Pattimanram with Sollin Selvar Thiru. P. Manikandan – 2/4/2024**



**BKM Movie Night"LAL SALAAM" - Tamil Movie2/10/2024**



**BKM50 Planning meeting – 2/17/2024**



**BKM Valentine's day with Harish Raghavendra's musical delight-2/17/2024**



**BKM Magic Show with SAC Vasanth – 2/25/2024**




**BKM TAMIL SCHOOL COMEPETITION -3/2/2024**



**BKM SAKTHI -a cultural extravaganza celebrating global women – 3/16/2024**




**BKM PICNIC 2024- 3/23/2024**



# தமிழோடு விளையாடு

செல்லா, மிச்சிகன்.



## 1 ஆறெழுத்துப் புதிர்

ஆதியும் நான்கும் ஆசை வினையே!
ஆதி நான்கும் அக்கறையின் ஆதரவுமே!
முதலும் முடிவு மூன்றும் அன்பின் வெளிப்பாடே!
ஆதி அந்தமிரண்டும் பூசுதல் வினையே!
முடிவும் நான்கும் தெப்பமே!
மூன்றிரண்டு முடிவிரண்டு விளைநில வழித்தடமே!
முதலிரண்டும் முடிவிரண்டும்
தலைக்குளி இலைப் பொடியே!
அனைத்துமாவது அன்பு ஆசை பாச நேச வெளிப்பாடே!

## 2 ஐந்தெழுத்துப் புதிர்


முதல் மூன்றும் ஐயப்பாட்டில் வினவுவதே!
முதலிரண்டும் முடிவும்
வினவியதன் விடையே!
ஆதியும் அந்தமிரண்டும் அடவியே!
அந்தம் மூன்றும் மதிப்பே!
அனைத்துமாவது உழைப்பின் ஊதியமே!

## 3 ஐந்தெழுத்துப் புதிர்

முதலும் முடிவிரண்டும் வாத்தியமே!
இரண்டுமைந்தும் கண்ணனின் கண்ணம்மா!
அந்தமிரண்டும் சாலையின் சட்டையே!
அந்தம் முன்பும் ஆதிக்கடுத்தும் நீல நிறத்துடை காளியே!
மொத்தமாவது முதுகெலும்பான பின்புலத்தோரே!

விடைகள் 46 பக்கம் பார்க்க



# சிகிச்சைக்கு சிகை – மனிதநேயத் துளிகள்

மனிதநேய வெளிப்பாடு என்பது நம் தலைமுடியிலிருந்து கூட தொடங்க முடியும் என்பதற்கு இதுவொரு சான்று.. சமீபத்தில் நம் ஹூஸ்டன் தமிழ்ப்பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர் திருமதி. ஸ்ரீதேவி பரத் அவர்களின் இந்த மனிதநேயச் செயலை அனைவரும் அறியத் தருவதில் தமிழ்ச்சாரல் பெருமிதம் கொள்கிறது.

அதற்கான வழிமுறைகளை அவரின் வார்த்தைகளிலே இப்போது கேட்போம்.

நான் சமீபத்தில் என் தலைமுடியைக் குழந்தைகளுக்கான விக்குகளுக்கு தானம் செய்தேன். விழிப்புணர்வுக்காக இதைப் பற்றி எழுத விரும்பினேன்.

பல பெண்கள் தங்கள் தலைமுடியை வெட்டுகிறார்கள், மேலும் பெரும்பாலான முடிகள் குப்பைத் தொட்டியில் முடிகிறது. நாம் தானம் செய்வதைக் கருத்தில் கொண்டால், நோய்களால் தலைமுடியை இழந்த ஒருவர் பயனடைவார்கள்

Wigs For Kids என்பது ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும், இது முடி உதிர்தலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவுகிறது.

முடி தானம் குறைந்தபட்சம் 12 அங்குலங்கள் இருக்க வேண்டும்

முடி நன்கொடைகள் சுத்தமாகவும், முற்றிலும் உலர்ந்ததாகவும் சேமிக்கப்பட வேண்டும். தானம் தரப்படும் முடி பெர்மிங், கலர் சிகிச்சை அல்லது ஹைலைட் செய் திருக்கக் கூடாது. தற்காலிக வண்ணம் அல்லது சிறப்பம்சங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கவை, ஆனால் வெட்டுவதற்கு முன் முற்றிலும் கழுவப்பட வேண்டும். நரை முடியும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.



உலர்ந்த முடியுடன், முடி நன்கொடை படிவம் மற்றும் பார்கோடு/ஐடி எண்ணுடன் Ziploc பையை ஒரு சீல் செய்யப்பட்ட உறையில் வைக்கவும்: குழந்தைகளுக்கான விக் - முடி தானம்

24231 சென்டர் ரிட்ஜ் சாலை, வெஸ்ட்லேக், ஒஹியோ 44145

**–ஸ்ரீதேவி சுப்ரமணியன்**

கவிதை

# சிறகடிக்கும் வானம்

மனிதன் தனியே தானாகத் தேடிச் செல்லாமல்
இயற்கையாய் தந்த போதி மரம் வானம்!

சற்று அமர்
உலகக் காற்றை சுவாசி
ஞானம் வளர்த்துக் கொள்
உயரம் பறக்க ஆசைகொள்,
தனியே அல்ல
ஏதோ ஒரு (Autism) மதியிறுக்கப் பறவைக்குக் கற்றுக்கொடு.
“விடியாத வானம் என்று ஒன்றில்லை” என்று.
இல்லையேல் செயற்கைச் சிறகைப் பொறுத்து!

எந்த தாய்க்கும் தன் குழந்தை மட்டும்
தரையில் தத்தளிப்பது மகிழ்ச்சி அல்ல.
எந்த தந்தைக்கும் தோள்களுக்கு மேல் வளர்ந்த
குழந்தையின் பாரம் வலி கொடுக்கும்.

உன் சிறகினால் ஒருவரின் கண்ணீர்த் துடை.



கூட்டமாகப் பறக்கும் பறவைகளுக்குத் தான் அழகு அதிகம்.

நீ சிறகடித்துப் பறக்கும் வானத்தில்
உன்னால் அந்த குழந்தைகளுக்குச்
சிறகுக்குள் வானம் காணப்படும்!!!

**கார்த்திக் பாலசுப்ரமணியன்.**
இந்தியன்லாண்ட், சவுத் கரோலினா.



# யார் பெரியவர்?

வானவில் சிரிக்கின்றது!
நிறங்களுக்குள் சண்டை,
யார் பெரியவர் என்பதில்!

**தனசேகரன்,**
லீக் சிட்டி, டெக்சாஸ்.

# Bharathi Kalai Manram Golden Club 2024










பாரதி கலை மன்றத்தின் பொன்விழா ஆண்டினை பொன் எழுத்துக்களில் பொறிக்கும் வண்ணமாக, சிறப்பு அம்சமாக 'கோல்டன் குரூப் கிளப் ' எனப்படும் மூத்த குடிமக்களுக்கு மாதாந்திர ஜூம் வழி சந்திப்புக்கான குழுவை BKM ன் புரவலரான (patron) திரு.ஏ.கே.சுப்ரமணியம் அவர்களும், BKM ன் முதல் செயலாளரான திரு.பாலகிருஷ்ணன் அவர்களும் இந்த கிளப்பிற்கான (Logo Plaque) இலச்சினை முத்திரையைச் சிறப்பு விருந்தினரான இந்தியத் தூதரகத் தலைவரிடம் கையளிக்க, அவர் அதை சீரிய முறையில் செயல்படுத்தும் பொறுப்பைப் பொன்விழா ஆண்டு தலைவர் திருமதி.விஜி திரு மற்றும் கோல்டன் கிளப்பின் ஒருங்கிணைப்பாளர்களான திரு. ரவிசங்கர் பெரியசாமி மற்றும் திருமதி. சௌம்யா கணேஷ்ராம் வசம் ஒப்படைத்தார்.

### BKM Golden Club:

ஜனவரி மாதம், 27 ஆம் தேதியன்று, கோல்டன் குரூப் கிளப்பின் முதல் நிகழ்வு, "மனம் ஒரு மந்திரச்சொல்" என்ற சீரிய தலைப்பில் இணையம் வழி நடந்தேறியது. ஹூஸ்டன் மனவளக்கலை மன்றத்தைச் சேர்ந்த திரு. அனந்த லட்சுமணன் அவர்கள், இந்த உரையின் மூலமாகப் பல அரிய கருத்துக்களை மூத்த குடிமக்களுடன் பகிர்ந்து கொண்டார்.

| | |
|---|---|
| February: | Lecture Saturday 02-24-2024 via Zoom |
| Topic : | Essential lifecycle changes needed for good health as we grow older |
| Speaker: | Dr. Bala N. Aiyer flyer |

மார்ச் 7ஆம் தேதி கோல்டன் குரூப்பின் காலாண்டிற்கான நேரிடை சந்திப்புக் கூட்டம், சுகர்லாண்ட் இந்தியன் சம்மர் உணவகத்தில் சிறப்பாக நடந்தேறியது. உறுப்பினர்களான மூத்தகுடிமக்கள் அனைவரும் நேரில் சந்தித்து கலந்துரையாடி மகிழ்ந்தனர். சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, " நீங்கள் போற்றும் புதுமைப்பெண்" என்ற தலைப்பில் உறுப்பினர்கள், ஏற்றமிகு பெண்களைப் பற்றி பல நல்ல தகவல்களை பகிர்ந்து கொண்டனர்.

பாரதி கலை மன்ற தலைவர் திருமதி. விஜியும், பொருளாளர் திருமதி.தேவி பிரபாகரனும் இந்நிகழ்வில் கலந்து கொண்டது மூத்தகுடிமக்களுக்கு மிகவும் நிறைவு தருவதாக அமைந்திருந்தது. கோல்டன் கிளப் குரூப்பின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான திரு. ரவிசங்கர் பெரியசாமி, செயற்குழுவினரோடு இணைந்து நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்து, சிறப்பித்தார். நிகழ்ச்சியில்சுவாரசியமான விளையாட்டுகள், சுவையான மதிய உணவு அதைத் தொடர்ந்து மனம் விட்டு சிரித்து பேசி, அரட்டையென அந்த மதியநேரம் இனிய பொழுதாக நகர்ந்தது.

# BKM Tamil Sabai

இலக்கியத்தை இடையறாது வாசிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தொடங்கப்பட்ட பாரதி கலை மன்றத்தின் ‘தமிழ்ச்சபை’ என்னும் மாதாந்திர ஜூம் வழி இலக்கியக் குழுவை, பொங்கல் விழா மேடையில் முன்னாள் தலைவர்கள் குழுவும், நெடுநாள் புரவலர்களும் இந்தியத் தூதரகத் தலைவர் மூலமாக இக்குழுவின் முத்திரை இலச்சினையை வெளியிடச் செய்து, செவ்வனே மாதந்தோறும் நடத்தும் பொறுப்பினை தலைவர்.திருமதி.விஜி திரு, இலக்கிய இயக்குநர் திருமதி.ராஜி வாஞ்சி மற்றும் இணை இலக்கிய இயக்குநர் திருமதி. சுவர்ணலதா மகேஷ் ஆகியோரிடம் ஒப்படைத்தனர்.

ஜனவரி மாதம், 27 ஆம் தேதியன்று பாரதி கலை மன்றம் என்ற பெயரின் பெருமையினை கூறும் வண்ணம் நம் தமிழ்ச்சபையின் முதல் மாதாந்திர இலக்கியக் கூட்டம்,” பாரதியின் புதுமைகள்” என்ற தலைப்பில் சொற்பொழிவுடன் மிகச் சிறப்பாக இணையம் வழி தொடங்கியது. அட்லாண்டா மாநகரைச் சேர்ந்த சிறந்த தமிழ் சொற்பொழிவாளரான திருமதி. ஜெயா மாறன் அவர்கள் சிறப்பாக உரையாற்றினார்.

பிப்ரவரி மாதம் என்றாலே காதலர் தினம் என்பது தானே அனைவருக்கும் நினைவிற்கு வரும். அதைச் சிறப்பிக்கும் வண்ணம் அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள சிறந்த ஆறு பேச்சாளர்களை







“காதல் அரட்டை” என்ற நகைச்சுவை கலந்துரையாடல் வழி இணையச் செய்தோம். அவர்களின் பேச்சுத் திறனால் சங்க காலம் தொடங்கி,நவீன காதல், சமகாலம் எல்லாம் கடந்து வருங்கால (AI) செயற்கை நுண்ணறிவுக் காதல் வரை சுவைப்படப் பேசி அனைவரையும் கவர்ந்தனர். பிப்ரவரி 24 ஆம் தேதி நடைபெற்ற இந்நிகழ்வில், திரு.மோகன்ராம், திரு. ராம்குமார், திருமதி.காயத்ரி இளையராஜா, திருமதி. ஹேமா ஜெய், திருமதி. ஷீலா ரமணன், திரு. வாஞ்சி கோவிந்த் ஆகியோர் சிறப்பாகப் பங்கேற்றனர்.

மார்ச் மாத மாதாந்திர இணையவழி இலக்கியக் கூட்டம் மகளிர் தின சிறப்புச் சிற்றுரைகளாக நடந்தேறியது.

”மெய்ப்படும் கனவுகள்” என்ற தலைப்பில் டல்லாஸ் நகரைச் சேர்ந்த திரு.சரவணக்குமார் அவர்களும், அட்லாண்டா நகரைச் சேர்ந்த திருமிகு. கிரேஸ் பிரதிபா அவர்களும் சிற்றுரை ஆற்றி சிறப்பித்தனர்.



# Bharathi Kalai Manram Youth Club 2024

## BKM யூத் கிளப் 2024



ஜனவரி 20 ஆம் தேதி, பாரதி கலை மன்றத்தின் பொன்விழா ஆண்டின் சிறப்பு அம்சமாக BKM யூத் கிளப் 2024 (BKM youth Club 2024) இந்தியத் தூதரகத் தலைவர் திரு மஞ்சுநாத் அவர்களால் கோலாகலமாகத் துவக்கி வைக்கப்பட்டது. யூத் கிளப்பின் இலச்சினை முத்திரை (logo) வெளியிடப்பட்டு, பி.கே.எம்.தலைவர் திருமதி.விஜி திரு, யூத் கிளப் ஒருங்கிணைப்பாளர்களான திரு ரவிசங்கர் பெரியசாமி மற்றும் திருமதி சௌம்யா கணேஷ்ராம் அவர்களிடம் பொறுப்புகள் வழங்கப்பட்டன.

## களச் செயல்பாடுகள்





01/20/2024 அன்று முதற்கட்டமாக BKM பொங்கல் விழாவில் இளைஞர்களால் பீட்ஸா, குளிர்பானம், தின்பண்டங்கள் ஆகியவை விற்கப்பட்டு இந்த ஆண்டுக்கான யூத் கிளப் நிகழ்ச்சிகள் துவங்கப்பட்டன.



2/25/2024 அன்று பாரதி கலை மன்றம் நடத்திய “விதைப்போம் வளர்ப்போம்“ நிகழ்ச்சி களப்பணியாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பங்குபெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் பூந்தொட்டியும் விதைகளும் வழங்கப்பட்டன. திருமதி வித்யா ரவிசங்கர், திருமதி சித்ரா நடராஜன் அவர்களின் பேருதவியுடன் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. 2/25/2024 அன்று பாரதி கலை மன்றம் நடத்திய திரு SAC வசந்த் அவர்களின் மாயாஜால நிகழ்ச்சியில் யூத் கிளப்பின் பீட்ஸா விற்பனை களைகட்டியது.



பி.கே.எம் பிக்னிக் அன்று தாங்கள் விதைத்து வளர்த்து வந்த செடிகளை விற்பனைக்கு கொண்டு வந்த இளையர்கள், மிக உற்சாகமா அவைகளை விறுவிறுப்பாக விற்பனை செய்தனர். அவர்களின் களப்பணி பாராட்டுக்குரியதாக அமைந்தது

# தங்க மகள்கள்

## திருமதி. சொர்ணலதா அருண் (சொர்ணா அருண்)



பள்ளி, கல்லூரி நாட்களில் தொடங்கிய எறிபந்து விளையாட்டு ஆர்வம் எனக்குப் பல பரிசுகளைப் பெற்றுத் தந்தது.திருமணத்திற்குப் பின் அமெரிக்காவிற்கு வந்தபின், எனது குடியிருப்புப் பகுதியில் உள்ள பெண்களுக்குப் பயிற்சி கொடுத்து ஒரு குழுவை அமைத்து, தொடர்ந்து எறிபந்து போட்டிகளில் போட்டியிட்டுப் பல பரிசுகளைப் பெற்றேன். என் தனித்திறனால், பல சிறந்த குழுக்களில் ஆடும் வாய்ப்பு கிட்டியது. 'RICAS' என்னும் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றேன்.

'RPL 23', 'HSL3', 'RPL RIICAS' Sports for CHARITY போன்ற போட்டிகளில் வெற்றி பெற்றேன். எறிபந்து போட்டியுடன் சில சமயங்களில், மட்டைப்பந்து போட்டியிலும் ) கிரிக்கெட்) கலந்து வெற்றி பெற்றுள்ளேன். சமீபத்தில் நான் விளையாடிய IPL கிரிக்கெட் போட்டியில் முதலிடம் பெற்றேன். நாங்கள் வெற்றி பெற்றதும் TESLA" lightning செய்து எங்களை வரவேற்றனர்.



## திருமதி. பிரியா பிரசாத்

வணக்கம், நான் பிரியா. எனது மாரத்தான் பயணத்தில் எனக்குப் பக்கபலமாக இருந்த எனது குடும்பத்தினர் தவிர முக்கியமாக நான் கருதுவது, வள்ளுவரின் இவ்வரிகள் “சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்பட்டுப்பா டூன்றுங் களிறு.” Even stung by failure the sturdy do not slacken. இவ்வரிகள், எனது கொள்கை.

மேலும், எனது துணைவரும், நானும், எங்கள் குழந்தைகளுக்கு உடல் மற்றும் மன ஆரோக்கியத்தின் முக்கியத்தை உணர்த்தவே நாங்கள் biking மற்றும் running மேற்கொள்கிறோம். ஏறத்தாழ பத்து வருட உழைப்பின் பயன், விடாமுயற்சியின் பலன்தான் முழு மாரத்தான் மற்றும் பற்பல அரை மாரத்தான்களும். என் மாரத்தான் அனுபவம் பிறருக்கும் ஊக்கம் அளிக்குமென நினைக்கிறேன்.

## திருமதி. வித்யா ரவிசங்கர்



மாரத்தான் என்றவுடன் மலைத்தேன்.முதன்முறை என்பதால் அரை மராத்தான் (half marathaon) என முடிவெடுத்தேன். ஜனவரி 14, குளிர்க்காற்று கூடவே வந்து கை கால்களை கட்டிப் போட்டது. ஓடினேன்..ஓடினேன் ..உடல் எடையைத் தாண்டி, குளிராடைகள் கனத்தன. ஓட ஓட வேகமும் கூடியது..தாகமும் கூடியது. துவண்ட போது உடன் ஓடுபவர்களின் உற்சாகம் துணையானது. வேக ஓட்டம், ஓட்டம், வேக நடை, நடை என்ற தாளகதியில் இயன்றவாறெல்லாம் முயன்றேன்...கடந்தேன் மைல்கள் 13.1. நிமிர்ந்தேன் சாதனையாளராக இன்று. புகைப்படத்திற்கு நிற்கையில் பூத்தது வியர்வை மட்டுமல்ல, புன்னகையும்தான் வெற்றியின் சின்னமாக.

## திருமதி. தேவி பிரபாகரன்

நான் தேவி பிரபாகரன். கடந்த மார்ச் 2, 2024 அன்று வுட்லண்ட்ஸில் நடந்த Half Marathon'ல் நானும் எனது கணவரும், மகன், மகளுடன் கலந்து கொண்டு வெற்றிகரமாக இலக்கை, குறித்த மணித்துளிகளில் முடித்தோம் என்பது உள்ளத்தில் மகிழ்ச்சியைப் பெருக்குகிறது. இது எங்களுடைய 3'வது முறையாகும். 21 கி.மீ தூரத்தை அயராமல் தொடர்ந்து ஓட/நடக்க என்னுடன் கையைக் கோர்த்துக்கொண்டு என் கணவர் துணையாக வந்தது, அன்று எங்களின் திருமண நாளை மேலும் மகிழ்ச்சியுடன் கொண்டாடக் காரணமாக இருந்தது. குட்டிகள் 16 அடி தாண்டும் என்பத்திற்கேற்ப குழந்தைகள் அதி வேகமாக இலக்கை அடைந்து எங்களுக்காகக் காத்திருந்தார்கள்.






## திருமதி சுபா கண்ணன்

அரை மாரத்தான் ஓட முடியுமா? பலமுறை யோசித்தேன். என்னால் 6 மைல்கள் ஓட முடிந்தால், நிச்சயமாக 13.1 மைல்கள் ஓட முடியும் என்று நான் நம்பினேன்! நான் தீவிர பயிற்சி எடுத்தேன். என் கணவர், என் நண்பர்கள் மற்றும் என் குழந்தைகள் என்னை ஊக்கப்படுத்தினர்.முதலில் நான் அரை மாரத்தான் ஓட முடியுமா என்று நினைத்தேன், ஆனால் என்னால் 6 அரை மாரத்தான் ஓட முடிந்தது. இது எனக்குப் பல அற்புதமான அனுபவங்களை வழங்கியது மற்றும் ஓடுவதன் மூலம் பல சிறந்த மனிதர்களை நான் சந்தித்துள்ளேன். குறிப்பாக அழகான இயற்கைக் காட்சிகளால் சூழப்பட்ட பாதைகளில் ஓடுவது தரும் சுதந்திர உணர்வை நான் விரும்புகிறேன். இது மிகவும் உற்சாகமானது மற்றும் இது எனக்கு உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் அத்தகைய ஊக்கத்தை அளிக்கிறது. ஓட்டத்தில் இருந்து மீண்டு வரும்போது, உந்துதலாகவும், சுறுசுறுப்பாகவும், பிஸியான நாளைச் சமாளிக்கும் திறனுடனும் உணர்கிறேன்.


## டாக்டர். லக்ஷ்மி ஸ்ரீவத்ஸ்



Professor of Pediatrics Hematology, University of Texas HSC, McGovern Medical School, Houston, TX

சமூகப் பணிகள்: Classical Arts Society யின் முன்னாள் செயலாளர், தற்போதைய நிர்வாகக் குழு உறுப்பினர். பாரம்பரியக் கச்சேரி நிகழ்வுகளை தொகுத்து வழங்குதல், விமர்சனக் கட்டுரைகள் எழுதுதல். ஹூஸ்டன் யுவ கலா உத்சவ் ஐ தொடக்கியுள்ளார். சங்கீத மேளாவை ஏற்பாடு செய்துள்ளார். ஹூஸ்டன் ஆர்கெஸ்ட்ரா குழுவில் வீணை இசை வாசிப்பு. வேதிக் ஹெரிடேஜ் பள்ளி மற்றும் தமிழ்ப்பள்ளியில் ஆசிரியர் மற்றும் நடுவராக தன்னார்வல தொண்டு. பி.கே.எம். 40வது ஆண்டு கவிதைப் போட்டியில் பரிசு, பாரதியார் தினப் பேச்சாளர்,பட்டிமன்றம் பேச்சாளர்,பி.கே.எம்.நாளைய பாரதி பேச்சுப் போட்டி- ஞானபாரதிக்கு 3 ஆம் பரிசு,திருப்புகழ் கற்றல், குழுப் பாடல்களில் பங்கேற்று வருகிறார். பி.கே.எம் நிகழ்வுகளில் திரைப்படப் பாடல்களைப் பாடியுள்ளார். MTS யில் ரங்கோலி போட்டிகளில் வென்றுள்ளார். SEWA இன்டர்நேஷனலுக்காக தன்னார்வத் தொண்டு செய்துள்ளார். மற்றும் ஹூஸ்டன் மராத்தான் 5k நடைப்பயணத்தில் பங்கேற்றுள்ளார். இவ்வாறு பன்முகத்திறனாளியாக திகழ்பவர் டாக்டர். லக்ஷ்மி ஸ்ரீவத்ஸ்

## திருமதி.கௌசல்யாதேவி நம்பி



சமையல் கலையில் எனக்குள்ள ஈடுபாட்டால் வலைத்தளம் தொடங்கினேன். "KAUSHI'S KITCHEN" என்ற யூ ட்யூப் சேனல் அதன் தொடர்ச்சியானது. மொழி கலாச்சார ஈடுபாட்டால் பி.கே.எம். தமிழ்ப்பள்ளியில் வகுப்பு எடுத்து வருகிறேன். பிடித்த செயலை செய்வதற்கும் வயது ஒரு தடையில்லை என்பதால் என் 45ஆவது வயதில் பரதநாட்டியக் கனவை நிஜமாக்கிக் கொண்டேன்.

ஏனைய திறன்கள் : மரப்பலகையில் வரைந்து அலங்கார பொருட்கள் செய்து கண்காட்சியில் பங்கு பெறுதல். மேடை நாடகங்களில் பங்கேற்பது. பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்வுகளை தினமலருக்கு செய்தி தொகுப்பாக்குவது "மனதில் செயலை நினைத்து விட்டால் மறந்தும் மறந்து விட வேண்டாம், தொடுவானம் தொலைவில் இல்லை, நாம் நினைத்தால் தொடும் தொலைவில் தான்.



## திருமதி. ராஜி வாஞ்சி

எனது சிறுவயது இலக்கிய ஆர்வம் கவிதைகளாயின முகநூலில்.

வெளியீடுகள் : 25ற்கும் மேற்பட்ட தொகுப்பு நூல்களில் பங்கேற்பு.

தனிநூல்: “ நீளிடைக் கங்குல்”

” குறிஞ்சி பூத்த வேலி” (குறுந்தொகை)

“ஏன் விரட்டினீர்கள், எங்களை? “அமெரிக்கப் பூர்வகுடிகள் பற்றியது

விருதுகள்: “நீளிடைக் கங்குல்”தமிழக அரசின் சிறந்த கட்டுரை நூல் விருது. கவிஞர் அப்துல் ரகுமான் விருது(2018),மகாகவி ஈரோடு தமிழன்பன் 80 விருது(2022), வெளிநாடு வாழ் பெண் கல்பனா சாவ்லா விருது(2022), தமிழன்னை சான்றோர் விருது – தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு. மு.க .ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா & உலக பெண்கள் தின விழா (2022) என்று 10 ற்கும் மேற்பட்ட விருதுகள். சிவகாசி அய்யாநாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி பாடத்திட்டத்தில் என்னுடைய ஹைக்கூவொன்று சேர்க்கப்பட்டுள்ளது.

## திருமதி. விஜயலக்ஷ்மி ராஜா



பொதிகைத் தொலைக்காட்சியிலே தொடங்கி ”DD தேவதை” என்று குமுதம் நாளிதழில் சிறப்பிக்கப்பட்டவர் திருமதி.விஜயலக்ஷ்மி ராஜா. மேடை,வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர், எழுத்தாளர், பட்டிமன்றப் பேச்சாளர், தமிழ்ப்பள்ளி தன்னார்வலர், தமிழ்ப்பள்ளி ஒருங்கிணைப்பாளர், பி.கே.எம்மின் முன்னாள் இலக்கிய இயக்குனர், மனிதவள மேம்பாட்டு அலுவலர் என இவரின் பன்முகத்தன்மைக்கான பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. ஏனைய ஏற்றங்கள்: வெளிநாடுவாழ் குழந்தைகளுக்கு தாய்மொழிப் பேச்சுத் திறன் (8K வானொலி) தமிழக அரசுப் பள்ளிகளுக்கு அடிப்படைத் தேவைகள், கல்வித் தேவைகள்,கணினி வழங்குதலுக்கான நிதி திரட்டுதலுக்கு தொண்டாற்றுவது. கல்லூரி மாணவர்களுக்கு ஆளுமை, பேச்சுத்திறன் மேம்பாட்டில் ஈடுபடுதல். ஊடகச் செய்தியாளர் (சன் டிவி, புதிய தலைமுறை)

பிரபலமான இதழ்களில் தொடர்ந்து படைத்து வருகிறார்

(அவள் விகடன், ராணி போன்றவை)

# தங்க மகன்கள்






## திரு.ரவிசங்கர் பெரியசாமி

கடந்த வருடம் April 29-30, 2023 நடைபெற்ற 150 மைல் மிதிவண்டி இரண்டு நாட்கள் நிகழ்வில் பங்கேற்றேன். இது ஹூஸ்டன் ல் இருந்து "காலேஜ் " வரை பல்லாயிரக்கணக்கான பங்கேற்பாளர்களுடன் சென்றது மறக்க முடியாத சம்பவம். இது உங்களுடைய மன உறுதியை வெல்லும் தருணம்.



## திரு.பிரபாகரன் குணசேகரன்

150 மைல் மிதிவண்டிப் பயணம். இது ஹூஸ்டனில் துவங்கி ஆஸ்டின் வரை செல்லும் இரண்டு நாள் பயணம். நாங்கள் குழுவாக இணைந்து பயிற்சி மேற்கொண்டு, ஒருவருக்கொருவர் தேவைப்பட்டால் உதவி செய்து கொண்டும் மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இலக்கை நோக்கிச்செல்லும் இன்பப்பயணம். இது எனக்குக் கால் நடையாக பழனி செல்லும் முருக பக்தர்களையும், ஐயப்ப பக்தர்களையும் நினைவு கூறச் செய்தது. விரதம் பூண்டு கடவுளை தரிசிக்கையில் மனம் நெகிழ்வது போல், பயிற்சி மேற்கொண்டு பாதையை மனம் தளராமல் கடப்பது பெரு மிதத்தையும் தைரியத்தையும் தூண்டுவதாகவே அமையும்.

## திரு.வித்யாபிரகாஷ் ராமசாமி

மார்ச் 2021 இல் எனது பிறந்தநாள் ஒரு மைல்கல்லாக இருந்தது, ஏனெனில் அப்போது நான் 50 ஆண்டுகளை நிறைவு செய்தேன். முதுமை மற்றும் சகாக்களின் அழுத்தம் என் மீது படர்ந்து வருவதால், எனது வாழ்க்கை முறையை மாற்ற முடிவு செய்தேன்.சாதாரண நடைப்பயிற்சிகள் மெதுவாக ஓட்டமாகவும், பின்னர் நீண்ட தூர ஓட்டப் பயிற்சிகளாகவும் மாற்றப்பட்டன.மே 2, 2021 அன்று முதல் அரை மராத்தான் முடிந்ததும், அதுவும் ஓட முடிவு செய்த 2 மாதங்களுக்குள் எனது வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை அடைந்தேன். காமராஜ், ஷோபனா, கண்ணன், செல்வக்குமார் ஆகியோர் தொடக்கம் முதல் இறுதி வரை உறுதுணையாக இருந்ததால் என்னால் சாதிக்க முடிந்தது. கடந்த 2 ஆண்டுகளில் 10 அரை-மராத்தான்களை நிறைவேற்றியது இதயப்பூர்வமான மகிழ்ச்சி.வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் மாறுவதற்கு வாழ்க்கை தூண்டுகிறது. எனது மாற்றம் தனித்துவமாகவும் திருப்திகரமாகவும் இருந்தது. உங்கள் வாழ்க்கையை மாற்றும் குரல்களைக் கேட்பது மிகவும் முக்கியமானது மற்றும் ஆரோக்கியமான அர்த்தமுள்ள வாழ்க்கையின் போக்கில் இது நிறைய அர்த்தம்



# சிலேடை அணி என்றால் என்ன



சிலேடை அணி என்பது ஒரு செய்யுளில் இடம் பெறும் ஒரு சொல் அல்லது சொற்றொடரானது பல வகையான பொருள்களில் இடம் பெறுமாயின் அது சிலேடை அணி ஆகும். இரட்டுற மொழிதல் எனவும் இதனை அழைப்பர்.

கவிஞர்கள் தாம் பாடுகின்ற பாடல்களில் ஒரு சொல் பல பொருள்களை உணர்த்தும் படி பாடப்பட்டதன் விளைவாகவே சிலேடை அணியானது தோன்றியது.



**வித்யாபிரகாஷ் இராமசாமி**

"வேலை"யில் மூழ்கிவிட்டான்

பொருள் 1 - என்ன சுற்றி நடக்கிறது என்பதை அறியாமல் செய்கின்ற வேலையில் மூழ்கி விட்டான்.

பொருள் 2 - வேலை என்றால் கடல் - கடலில் மூழ்கி விட்டான்.

வேலை என்ற ஒரு சொல் செம்மொழி சிலேடையாக விளங்குகிறது.

சீனிவாசன் பாற்கடலில் துயில் கொள்கிறான்.

ஒருவகையில், சீனிவாசன் -"சர்க்கரையில் வாசம் செய்யும் எறும்பு" பாலில் இறந்து மிதக்கிறது எனவும்,

இன்னொரு வகையில், சீனிவாசனாகிய விஷ்ணு பகவான் பாற்கடலில் துயில் கொள்கிறார் எனவும் பொருள்படுகின்றது.

இது தொடர் செம்மொழி சிலேடை. எவ்விதமான மாற்றமும் இன்றியே இரண்டு விதமாகப் பொருள் தரக்கூடியது.

நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்

வெஞ்சினத்தில் பற்பட்டால் மீளாது

பொருள் 1 - பாம்பு

நஞ்சிருக்கும் = நஞ்சு + இருக்கும் - (விஷம் இருக்கும்)

தோலுரிக்கும்= தோலை உரித்துக் கொள்ளும்

நாதர்முடி மேலிருக்கும் = சிவன் தலையில் இருக்கும்

வெஞ்சினத்தில் பற்பட்டால் மீளாது = சீறி அதன் பல் நம் மீது பட்டால் உயிர் மீளாது (தப்ப முடியாது)

பொருள் 2 - வாழை பழம்

நஞ்சிருக்கும் = நஞ்சி + இருக்கும் -நன்றாக பழுத்தால் நஞ்சி விடும். (நைந்து இருக்கும்)

தோலுரிக்கும்= அதன் தோலை உரித்தால் தான் பழம் கிடைக்கும்

நாதர்முடி மேலிருக்கும் = பஞ்ச அமிர்த பழத்தில் ஒன்றை உள்ள வாழை பழம் அபிஷேகம் செய்யும் பொது சிவன் தலையில் வைக்க படும்

வெஞ்சினத்தில் பற்பட்டால் மீளாது = வெஞ்சினமாக - (உணவோடு பழத்தை சாப்பிட்டால்) வெண்மையான பற்கள் பட்ட உடனே வயிற்றுக் குள்ளே சென்றுவிடும்

இது பிரிமொழிச் சிலேடை, பிரித்து படித்தால் பல பொருள் தருவது.

தமிழறிஞர் கி.வா.ஜவின் சிலேடைகள் பிரபலமானவை. கி.வா.ஜகன்னாதன் ஒரு விருந்தில் கலந்துகொண்டபோது "உங்களுக்குப் பூரி பிடிக்குமா?" என்று கேட்டார்கள்.

"ஜகன்னாதனுக்குப் பூரி பிடிக்காமல் இருக்குமா?" என்று உடன் பதிலளித்தார் கி.வா.ஜ.

# தமிழோடு விளையாடு
## விடைகள்

### தமிழோடு விளையாடு - 1

**ஆறெழுத்துப் புதிர் 1 விடை**

அணை
அரவணை
அணைப்பு
அப்பு
புணை
வரப்பு
அரப்புஎ
அனைத்துமாவது அன்பு ஆசை பாச நேச வெளிப்பாடே!
அரவணைப்பு

### தமிழோடு விளையாடு - 2

**ஐந்தெழுத்துப் புதிர்**

வருமா?
வரும்
வனம்
மானம்
அனைத்துமாவது உழைப்பின் ஊதியமே!
வருமானம்


### தமிழோடு விளையாடு - 3

**ஐந்தெழுத்துப் புதிர்**

கிதார்
ராதா
தார்
தாரா
மொத்தமாவது முதுகெலும்பான பின்புலத்தோரே!
கிராமத்தார்

### விடைகள்

1. அரவணைப்பு
2. வருமானம்
3. கிராமத்தார்





# பாரம்பரிய அரிசியும், மருத்துவ குணங்களும்



**அகிலா சண்முகம்**

பாரம்பரிய அரிசிகளைப் பற்றி மறந்து போன தகவல்களும், அதற்குப் பின்னால் இருக்கும் மருத்துவ குணங்களும், நம்முடைய அன்றாட வாழ்வியல் முறைகளைக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எப்படிப் பயன்படுத்தலாம்? இதைப்பற்றிப் பார்ப்போம்.

### பூங்கார் அரிசி

பெயர்க் காரணம் : பூங்கார் அரிசி கார் பட்டையைச் சேர்ந்த அரிசி எனவே பூ + கார் சேர்ந்து பூங்கார் என நாள்பட்ட முறையில் அழைக்கப் படுகிறது.



**பயன்கள்:** பூப்படையும் மற்றும் புதுமண பெண் களுக்கும் கொடுக்கப்படும் அரிசியாகும். இது கர்ப்பப் பைக்கும், கருமுட்டை வளர்ச்சிக்கும், சுகப்பிரசவம் அடைவதற்கும் சிறந்த மருந்து ஆகும். PCOD, PCOS,தைராய்டு (Thyroid). பீரியட்ஸ் நேரத்தில் overflow, மற்றும் கர்ப்பப்பை சம்பந்தமான பிரச்சினைகளுக்கும் உணவே மருந்தாக இந்த அரிசியைப் பயன்படுத்தலாம். தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்கள் குழந்தையின் எலும்பு நன்றாக வலுப்பெறும்.

**சாப்பிடும் முறை;** அதிமதுரப் பொடி சிறிதளவும் இந்து உப்பும் சேர்த்துக் காலையில் கஞ்சியாகச் சாப்பிடலாம். புட்டு செய்து சாப்பிட்டால் இன்னும் பலன் அதிகமாக உள்ளது என்கிறார்கள். இடியாப்பமாகவும் சாப்பிடலாம்.

### கருங்குறுவைஅரிசி

**பெயர்க் காரணம்:** இந்த அரிசியில் கரு உற்பத்திக்கான முக்கியத்தன்மைகள் உள்ளதால் கருங்குறுவை என்றழைக்கிறார்கள்.



**பயன்கள்:** கரு முட்டை மற்றும் உயிரணு வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யக் கூடிய தன்மையால் சித்தர்கள் அதிகமாக இந்த அரிசியைப் பெண்களுக்குப் பரிந்துரைக்கிறார்கள்.

**சாப்பிடும் முறை:** வறுத்துப் பொடி செய்து கஞ்சியாகவோ அல்லது இட்லியாகவும் சாப்பிடலாம். நீராவியில் ஆவி கட்டிய உணவாகச் சாப்பிட்டால் அதிக நன்மை தரும். குழந்தைக்காகக் காத்திருக்கும் தம்பதியர்கள் ஆண், பெண்கள் இருவருமே சாப்பிடலாம்.

### காட்டு-யானம் அரிசி



**பெயர்க் காரணம்:** காட்டு யானை, நெல் புதருக்குள் நின்றாலும் வெளியே தெரியாத அளவுக்கு உயரமாக வளர்ந்து நிற்கும் , அது மட்டுமில்லாமல் காட்டு யானை பலத்தைக் கொடுக்கக் கூடிய பலம் நிறைந்த உணவு என்பதால் இப்பெயர் ஏற்பட்டது.

**பயன்கள்:** குழந்தைகளுக்கு மிகவும் நல்ல உணவு. இது காட்டு யானை பலத்தை எலும்புக்குத் தரக்கூடிய சக்தி நிறைந்தது. குழந்தைகளின் எலும்பு மற்றும் மூளை வளர்ச்சியில் முக்கியப் பங்காக உள்ளது.

**சாப்பிடும் முறை:** இதை இட்லியாக அல்லது கஞ்சியாக வைத்து குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். கர்ப்பமாக உள்ள தாய்மார்கள் இந்த கஞ்சியைக் குடித்தால் தாய்மார்களுக்கும், குழந்தைக்கும் எலும்பு வளர்ச்சிக்கு உதவும்.



# பறை பறை

## HOUSTON PARAI KUZHU

தமிழில், 'பறை' என்ற சொல்லுக்கு 'பேசுவது' அல்லது 'சொல்வது' என்று பொருள். சங்ககால சோழ, பாண்டிய ஆட்சியாளர்களின் அரசவைகளில் திகழ்ந்த பழங்கால கருவியாகப் பறையை வரலாறுகள் விவரிக்கின்றன. முக்கிய செய்திகளையும் கட்டளைகளையும் அறிவிக்கப் பறைகள் பயன்படுத்தப்பட்டன. திருமணங்கள், கோவில்கள், விழாக்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான கொண்டாட்டங்களில் பறை வாசிக்கப்பட்டது. கலைஞர்கள் பறை இசைகளுக்கு ஏற்ப தங்கள் அசைவுகளை மாற்றிக்கொண்டு, சிரமமில்லாத பாணியில் ஒற்றுமையாக நடனமாடுவார்கள்.

முரசு அல்லது பறை பத்து அரச சின்னங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது. "பாரத மாதா தசங்கா" இயற்றிய மகாகவி பாரதியார், பாரதமாதாவின் ஒரு அடையாளமாகப் பறை பற்றிப் பாடியுள்ளார்.

இந்த அளவிற்குப் பெருமை பெற்ற பழமையான பறை கருவியை ஹூஸ்டனில் உள்ள தன்னார்வலர்களை ஒன்று சேர்த்துப் பறை கருவியை இசைக்கவும், நடனம் ஆடவும் கற்றுக் கொடுத்து ஹூஸ்டன் பறைக்குழு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஹூஸ்டன் பறைக்குழு கடந்த ஆறு மாதமாகக் கிட்டத்தட்ட முப்பதிற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர்.

திருமணம், வரவேற்பு விழாக்கள், கோயில் திருவிழாக்கள், தீபாவளி நிகழ்ச்சிகள், துர்கா பூஜா நிகழ்ச்சிகள், தசரா ஊர்வலமென பல்வேறு நிகழ்ச்சிகளைப் பறையிசை நடனத்துடன் வெற்றிகரமாகக் கொண்டாடி வந்துள்ளனர். பெருநிறுவன விழாக்கள், மகாசிவராத்திரி, பாரதி கலை மன்றம் நடத்தும் இந்தியக் கலாச்சார கண்காட்சி, சக்தி மகளிர் விழா போன்ற பல கலாச்சார நிகழ்வுகளில் பறை முழக்கத்தைச் சிறப்பாக அரங்கேற்றி வருகின்றனர். இலவச பறை பயிற்சிப் பட்டறைகளையும் அவ்வப்போது ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

பறை வகுப்புகள் மற்றும் நிகழ்ச்சி குறித்த விவரங்களை அறிய அணுகவும்: *info@houstonparai.com 214-934-4467*



குறுங்கட்டுரை

# ஜாடிக்கேத்த மூடி



சமீபத்தில் எங்கள் நண்பரின் இல்லத் திருமணத்திற்குச் சென்றிருந்தேன். கொடிக் கம்பம் கட்டி, கொத்தோடு வாழையை பந்தலில் நிறுத்தி, மலர் மண்டபத்தில் தேக்கின் தேகம் கொண்ட மணமகன், தாழம்பூவென வந்த மணப்பெண்ணின் கரம் பிடித்து ஐம்பூதங்களில் ஒன்றான அக்னியின் சாட்சி கொண்டு உற்றார், உறவினர், ஆசி வழங்க திருமணம் நன்றே நடந்தது.

இனிய இல்லம் செய்ய இரு மனம் இனிதே இணைந்தது! புதுமணத் தம்பதியருக்கு வாழ்த்துகளை தெரிவித்து விட்டு வீடு திரும்புகையில் மனதில் ஒரு வித மகிழ்ச்சியும் நிறைவும் நிலவியது.

"ஜாடிக்கேத்த மூடி!" என்று பெரியவர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஜாடியின் துவாரம் பல விதமான வடிவங்களில் இருக்கலாம். வேறுபட்ட அளவுகளில் இருக்கலாம். ஒரே அளவும், வடிவமும் கொண்ட மூடியம் ஜாடியும் இணைந்தால் அது பயனுள்ளதாக இருக்கும். ஜாடியிடம் இல்லாதது மூடி கொண்டதானாலேயே அது பொருத்தமாக உள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது. அது போல ஒரே எண்ணம் கொண்டு, வெவ்வேறு குணம் உள்ளவர்கள் இணைவது உலக நியதி. இதைப் புரிந்திருந்தால் இல்லறத்தில் ஏது சஞ்சலம்?!

மண் பயனுற வாழ்ந்தல் வேண்டும் என்கிறார் பாரதியார். இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறுவதும் இதுவே. நமக்கு முந்தைய தலைமுறையினருக்கும், நமக்குப் பின் வரும் சந்ததியருக்கும் நல்வழியில் உதவுபவனும், வறியவர்க்கு, துறவு பூண்டவர்க்கும், இல்லவாழ்க்கையில் உள்ளவனே துணையாக இருப்பவன் என்றும் வள்ளுவம் கூறுகிறது.

அன்புப் பிணைப்பு கணவன் மனைவியருக்குள் வளர்ந்து, அறநெறிப்படியே நிகழ்ந்து வருவதும் இருப்பதனால், இல்வாழ்க்கையில் பண்பும் பயனும், அந்த வாழ்வே ஆகுகிறது என்று வள்ளுவரின் மொழிக்கு புலியூர்க் கேசிகன் உரை கூறுகிறது. அறம் என விளங்குவனவைகளைச் செய்து வாழ்வதே கணவன் மனைவியினுடைய பண்பாகவும் பயனாகவும் இருந்தால் வாழ்வாங்கு வாழ்ந்ததற்கு அடையாளமாகி விண்ணுலகில் உறையும் தெய்வமாக முடியும் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

சமீப காலங்களில் இல்லறம் நல்லறம் ஆவது அரிதாகி வருவதை நம் கண்ணெதிரே காண்கிறோம். நீ, நான் என்பதை மறந்து, நாம் என ஒன்றான பிறகு "என்" என்ற வார்த்தைக்கு இடம் ஏது ?!

நாம் ஒவ்வொருவரும் இம்மண்ணுலகில் வந்ததற்குக் காரணம், நாம் செய்து முடிக்க வேண்டிய கடன் இன்னும் இருப்பதாலேயே. அந்தப் பணியைச் செவ்வனே செய்ய நமக்கு உற்றத் துணையாக அமைவதே வாழ்க்கைத்துணை. தம் துணையின் வேறுபாடுகளை அறிந்து, குறைகளை நிறைகளாகப் பக்குவப்படுத்தி பொது நலம் கொண்டு, சமூகம் ஆற்றலுற பணி செய்தால் இல்வாழ்வினால் இம்மண் பயனுறும்!



**தேவி பிரபாகரன்**
சைப்ரெஸ், டெக்சாஸ்






# சமைக்கலாம் வாங்க

## தஞ்சாவூர் வாழைக்காய்ப் பொடி

**தேவையான பொருட்கள்**

வாழைக்காய் – 2 சிறியது அல்லது 1 பெரியது

வறுக்க தேவையான பொருட்கள்

கடலைப் பருப்பு – 2 டேபிள் ஸ்பூன்

உளுத்தம் பருப்பு– 2 டேபிள் ஸ்பூன்

காய்ந்த சிவப்பு மிளகாய் – 5

பெருங்காயம் – ½ டீஸ்பூன்

உப்பு தேவையான அளவு

**செய்முறை**


வாழைக்காயை நல்லெண்ணை தடவி அடுப்பு தீயில் எல்லா பக்கமும் வேகும் அளவு நன்கு சுட்டு எடுத்து கொள்ள வேண்டும். ஆறியபின் தோலை நீக்கிவிட்டு துருவி வைத்துக்கொள்ள வேண்டும் அல்லது கையால் உதிர்த்துக் கொள்ள வேண்டும்.

நல்லெண்ணையில் கடலைப் பருப்பு ,உளுத்தம் பருப்பு, சிவப்பு மிளகாய் பெருங்காயம் ஆகியவற்றை சேர்த்து சிவப்பாக வறுத்து, கொறகொறப்பான பொடியாக அரைக்கவும்.

துருவிய வாழைக்காயுடன் உப்பு சேர்த்து மசாலா கலவையை கலக்கவும். சூடான சாதத்தில் நல்லெண்ணை / நெய் விட்டு இந்த பொடி போட்டு பிசைந்து சாப்பிடலாம்.



**மங்களம் சிவராமகிருஷ்ணன்**
**கேட்டி,டெக்சாஸ்**



சிறுகதை

# நேர்மைக்கு பரிசு உறவு



வினோதினி
வீரபாண்டியன்

மணிவண்ணன் என்று ஒரு ஏழை வாழ்ந்து வந்தான். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த அவனுக்கு, வாழ்க்கை தொடர்ந்து தோல்விகளையே அளித்து வந்தது. ஆனாலும், விடாமுயற்சியுடன் வாழ்க்கையில் எப்படியாவது சாதித்தே தீர வேண்டும் என்ற வெறியில், ஓயாமல் உழைத்துக் கொண்டு வந்தான். மணிவண்ணனின் அப்பா ஒரு சலவைத் தொழிலாளியாக இருந்தார். அந்தத் தொழிலையே தொடரலாம் என்று நினைத்து, மணிவண்ணன் தானும் பல வீடுகளுக்கு சென்று அழுக்குத் துணிகளை தருமாறு கேட்டான்.

அந்த ஊரில் வைதேகி என்ற ஒரு பெண் இருந்தாள். அவள் தனது கணவனின் ஆடையை ஆற்றங்கரையில் கைகளில் அடித்து துவைத்துக் கொண்டு இருந்தாள். பக்கத்தில் இருந்த பெண்மணிகளிடம் ஊர் வம்பு பேசியபடியே துவைத்ததால், துணி கிழிந்து போனது கூட தெரியாமல், வீட்டிற்கு வந்து, அதை காயப் போட்டு விட்டாள்.

காய்ந்த துணியை எடுத்து மடிக்கும் போது தான் தெரிந்தது, அந்த சட்டை கிழிந்து இருக்கிறது என்று . கணவர் வந்தால் திட்டுவாரே என்று பயந்து, என்ன செய்வது என்று விழித்து, கையைப் பிசைந்து கொண்டிருந்தாள். சரியாக அந்த நேரம் பார்த்து, மணிவண்ணன் வைதேகியின் வீட்டிற்கு வந்து, "சலவைக்கு துணி ஏதாவது உண்டா?" என்று கேட்டான்.

" இதுதான் சமயம், இவன் மீது பழியை போட்டு விடலாம்!" என்று எண்ணிய வைதேகி, கிழிந்த சட்டையை நாலைந்து சட்டைகளுக்கு நடுவில் வைத்து, அதை மணிவண்ணன் கண்ணில் படாமல், அவனிடம் சலவைக்கு போட்டு விட்டாள். சலவை செய்ய ஆரம்பிக்கும் போது தான் மணிவண்ணனுக்கு தெரிந்தது, சட்டை கிழிந்திருக்கிறது என்று. அப்போதுதான் மணிவண்ணனுக்கு தோன்றியது! "அப்பா எப்போதும் சலவைக்கு துணிகளை வாங்கும் போது, முன்னும் பின்னும் திருப்பி சரி பார்ப்பார்" என்று! "சரி! இது நமக்கு கிடைத்த முதல் பாடம்" என்று நினைத்துக் கொண்டு, வைதேகியிடம் சென்று, "அம்மா, நீங்கள் இன்று சலவைக்கு போட்ட சட்டை கிழிந்து இருக்கிறது. நான் அதற்கு காரணம் இல்லை" என்று கூறினான்.

வைதேகியின் கணவனும் பக்கத்தில் இருக்கவே, அவள் பூமிக்கும் வானத்துக்குமாக குதிக்க ஆரம்பித்து விட்டாள். "அது எப்படி கிழிந்திருக்கும்? நேற்று கூட என் கணவர் அந்த சட்டையை போட்டுக் கொண்டு தானே வேலைக்கு போனார்! அந்த சட்டையில் என் கணவர் கதாநாயகன் போல இருப்பாரே!" என்றெல்லாம் கூறி, இடைவிடாமல் புலம்பிக் கொண்டே இருந்தாள். "புது சட்டையை இப்படி கிழித்து விட்டானே" என்று கணவனுக்கும் கோபம் வந்து, மணிவண்ணனை கண்டபடி திட்டி, "சட்டைக்கான தொகை 100 ரூபாயை நாளைக்குள் கொண்டு வந்து கொடுக்க வேண்டும்" என்று மணிவண்ணனை மிரட்டி அனுப்பினான்.

மணிவண்ணனும் அழுது கொண்டே வீட்டிற்கு சென்று, தன் வீட்டில் இருந்த பழைய பாத்திரங்களை அடகு வைத்து, 100 ரூபாயை திரட்டினான். மறுநாள் காலை அந்த பணத்தையும், வைதேகி கொடுத்த சட்டைகளையும் எடுத்துக்கொண்டு, அவளது வீட்டிற்கு சென்றான். வைதேகியின் கணவனிடம், பணத்துடன் சேர்த்து அந்த சட்டைகளையும் மணிவண்ணன் ஒப்படைத்தான். சட்டைகளைப் பார்த்த கணவன் ஆச்சரியமடைந்து, "என்ன இவ்வளவு சட்டைகளை சலவைக்கு போட்டுள்ளாள்! இந்த நான்கு சட்டைகளும் துவைத்து, மடித்து அலமாரியில் அடுக்கப்பட்டிருந்ததே!" என்று நினைத்து, வைதேகியைக் கூப்பிட்டு, "எதற்கடி இந்த சட்டைகளை எல்லாம் சலவைக்கு போட்டாய்?" என்று கேட்டான்




வைதேகி என்ன காரணம் கூறுவது என்றே தெரியாமல், "சட்டை அழுக்காக இருந்தது, நாற்றம் அடிக்கிறது" என்று என்னவெல்லாமோ கூறி, கணவனை ஏமாற்ற முயன்றாள். அந்த நேரம் பார்த்து, பக்கத்து வீட்டுக்கார பாட்டி வைதேகி வீட்டிற்கு வந்தாள். சட்டைகள் சலவைக்கு போய் வந்ததைப் பற்றி பாட்டியின் காதில் விழுந்தது. உடனே அந்த பாட்டி வைதேகியைப் பார்த்து, "என்னடி அம்மா! நேத்து தானே இதை ஆற்றங்கரையில் துவைத்தாய்! பிறகு எதற்கு இதை இவனிடம் சலவைக்கு போட்டு உள்ளாய்? இருந்தாலும் பணத்திமிரடி அம்மா உனக்கு!" என்று கூறிவிட்டு, வைதேகி முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கணவனும் வைதேகியைப் பார்த்து முறைத்துக் கொண்டிருந்தான். வைதேகியின் கை, கால்கள் நடுங்க ஆரம்பித்தது. வியர்த்து கொட்டியது. கணவன் வைதேகியைப் பார்த்து, "ஆற்றங்கரையில் கதை பேசிக்கொண்டு துணி துவைத்து, அதை கிழித்தது மட்டுமல்லாமல், துவைத்த சட்டைகளுக்கு நடுவில் கிழிந்த சட்டையை வைத்து, அதை மணிவண்ணிடம் கொடுத்து, அவனுடன் சேர்த்து என்னையும் ஏமாற்றி இருக்கிறாய். மணிவண்ணனிடம் மன்னிப்பு கேள்!" என்று மனைவியை மிரட்டினான்.

மணிவண்ணனோ பதறிப்போய், "ஐயா, அம்மா மன்னிப்பெல்லாம் கேட்க வேண்டாம்! என் மேல் தவறு இல்லை என்று நிரூபிக்கப்பட்டு விட்டது. இது போதும் எனக்கு!" என்று கூறி, கிளம்ப முற்பட்டான். ஆனால் வைதேகியின் கணவன் 100 ரூபாய் உடன் சேர்த்து, துவைத்த சட்டைகளுக்கான பணத்தையும் சேர்த்து மணிவண்ணனுக்கு வழங்கியதோடு, "என் நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் இனி உன்னிடமே சலவைக்கு துணிகளைப் போடச் சொல்கிறேன்" என்று கூறி மணிவண்ணனை மகிழ்ச்சிப்படுத்தினான்.

வைதேகி மணிவண்ணனைப் பார்த்து, "என்னை மன்னித்துவிடு அண்ணா! தெரியாமல் செய்துவிட்டேன். என் கையால் ஒரு டம்ளர் காப்பி குடித்துவிட்டு போ அண்ணா!" என்று கூறி அவனை அமர சொன்னாள். "அம்மா என் ஜாதி என்ன, உங்கள் ஜாதி என்ன! நானாவது, உங்கள் வீட்டில் காபி குடிப்பதாவது! நீங்கள் கூறியதே போதும் எனக்கு!" என்று கூறி கிளம்ப முற்பட்டான்.

அப்போது வைதேகியின் கணவன் மணிவண்ணனை தடுத்து, "உன் ஜாதியை தூக்கி வீதியில் விட்டெறி. வைதேகி உன்னிடம் சலவைக்கு துணி போட்டதற்கு சாட்சியமே இல்லை. நீ நினைத்திருந்தால், இந்த கிழிந்த சட்டையை தூக்கி எறிந்து விட்டு, இவள் சட்டையே கொடுக்கவில்லை என்று சாதித்திருக்கலாம். ஆனால் துணிவுடன் கிழிந்த சட்டையை கைகளில் எடுத்துக் கொண்டு வந்து, உன் தரப்பு நியாயத்தை சொல்ல முற்பட்டாய். ஆனால் ஆத்திரக்காரன் நான் தான் அவசரப்பட்டு முடிவெடுத்து விட்டேன்" என்று கூறி முடிக்க, வைதேகி காப்பியைக் கொண்டு வந்து மணிவண்ணனிடம் நீட்டினாள். காப்பியை குடித்து முடித்துவிட்டு, "இனி நமக்கு நல்ல காலம் பிறந்து விட்டது!" என்று மனதிற்குள் சொல்லியபடியே, தன் வீட்டிற்கு கிளம்பினான் மணிவண்ணன்.



# சித்திரச் சாளரம்




**ஹரிணி ரவிசங்கர்,**
**சுகர்லாண்ட்**





**வித்யா ரவிசங்கர்,**
**சுகர்லாண்ட்**



**ஸ்ரீஹன்,**
**சைப்ரஸ்**



**சாருலதா கார்த்திக்,**
**கேட்டி**






தனுஜா திலக்,
ஸ்ப்ரிங்





ரெனோவர்ஷினி,
கேட்டி






நியந்த்ரி ராஜசேகரன்,
கேட்டி




திருக்குறள் புதிர்கள் உருவாக்கம்: ராம்குமார் ராமலிங்கம்










**Pandu Narayanasamy**

Buying | Selling | Rentals
Commercial | Residential |
Investment Properties



## LET ME HELP SELL YOUR HOUSE, FIND YOUR DREAM PROPERTY

pandu.n.samy@gmail.com

281-203-4553

**CENTURY 21 OLYMPIAN**

6060 Richmond Ave, Suite 100 | Houston | Texas | 77057

# வெற்றி! வெற்றி! திக்கெட்டும் வெற்றி!



எடுத்த காரியம் யாவினும் வெற்றி ,
எங்குநோக்கினும் வெற்றி மற்றாங்கே,
விடுத்த வாய்மொழிக் கெங்கணும்
வெற்றி வேண்டினேன்.

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி எதனிலும் வெற்றி என
தங்கத்தமிழ் பெற்ற தவப்புதல்வனாம்
தரணி போற்றும் தமிழ்ப்பெருநிலத்தின்
மகாகவியின் சொற்கள் நமக்கும்
மிகப் பொருத்தமாய் நடக்கட்டும் நடக்கட்டும்.

வண்ணக்கனவுகள் பலிக்க
எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும் என
உள்ளம் விரித்துக் கூறும் பாரதியின்
நல்லொளிச் சொற்களை நாம் ஏற்க
எண்ணிய முடியும் என்றும்
திண்ணமாய் முடியும் என்ற
மகாகவி பாரதியின் சொற்களோடு
நன்றி கூறி வணங்கி மகிழ்கின்றோம்.

**பாரதி கலை மன்றம், ஹூஸ்டன்.**